# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 32
விலை ரூபாய் 20.00

தீபம் -32 | செப்டம்பர் இதழ் -2016,
ஆரம்பம் 15 மாசி-2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 222 1022, 026 320 2532


ஆண்டவரே என் மன்றாட்டு உம் திருமுன் வருவதாக (தி.பா:88:2)



## ஆயரின் செய்தி

இறை இயேசுவில் அன்பான சகோதரர சகோதரிகளே.

திருமலைதீபம் மூலமாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி மரியன்னையின் விண்ணேற்பு பெருவிழாவைத் தொடர்ந்து 25ம் திகதி மறைமாவட்டம் உருவாகி 123ம் வருடநிறைவை சிறப்பித்தோம். 1893ம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்திலிருந்து பிரிந்து திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் தனியாக திருகோணமலை மறை மாவட்டமாகப் பிரிக்கப்பட்டது. இன்றுவரை பல ஆயர்கள், குருக்கள், துறவறத்தவர் என பலவெளிநாட்டு, உள்நாட்டு மறை பணியாளர்கள் தமது அர்ப்பணம் நிறைந்தபங்களிப்பை செய்துள்ளார்கள். இவர்களுக் காக இறைவனுக்கு நன்றி கூறினோம். சென்று போதியுங்கள் எனும் இயேசுவின் கட்டளைக்கு பணிந்து மறைபணி எமது இலங்கை நாட்டிற்கும் வந்தது இன்று இலங்கையில் 12 மறைமாவட்டங்களாகவும் திருகோணமலை தனி மறை மாவட்டமா கவும் செயல்படுகின்றது.

பலரும் தமது அர்ப்பணிப்பால் வளர்த்துவிட்ட விசுவாசத்தை வாழ்ந்து காட்டிசான்று பகர்வதும் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்க ளாக செயல்படுவதும் எமது கடமையாகும். இதை எப்போதும் நாம் உணர்ந்து எமது செபத்திலும் அர்ப்பண வாழ்விலும் ஒருவரை ஒருவர் விசுவாசத்தில் திடப்படுத்துவோம்.

செப்டம்பர் மாதம் சில முக்கிய நிகழ்ச்சிகள் திருச்சபையில் நடைபெறவுள்ளன. 04ம் திகதி உரோமையில் திருத்தந்தையின் தலைமையில் நடைபெறவுள்ள திருப்பலியின் போது முத்திப்பேறு பெற்ற அன்னை தெரேசா புனிதையாகப் பிரகடனப் படுத்தப்படவுள்ளார். அன்னைதெரேசா தனது அன்புப் பணியினால் இறையன்பையும் இரக்கத்தையும் காட்டினார். இவரது பணி உலகிற்கே பெரும் சவாலாகியது. இரக்கத்தின் ஆண்டில் அன்னை தெரேசாவை புனிதையாக உயர்த்துவது மிகவும் பொருத்தமான ஒன்றாகவும் சரித்திர நிகழ்வாகவும் உள்ளது. நாமும் இரக்கமுள்ளவர்களாக வாழ அன்னையின் பரிந்துபேசுதலை வேண்டுவோம். அன்னைதெரேசாவின் சபையைச் சேர்ந்த அனைத்து சகோதரிகளுக்கும் விசேடமாக இலிங்கநகர் இல்லத்தில் பணியாற்றும் சகோதரிகளுக்கும் எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இவர்கள் பணி வளர எமது பங்களிப்பையும் செய்வோம். 08ம்திகதி மரியன்னை யின் பிறப்பு பெருவிழா. இது பற்றி விவிலியத்தில் குறிப்பிடப்படா விட்டாலும் திருச்சபையின் பாரம்பரியத்தில் நாம் பலவிடயங்களை அறிந்துகொள்ளலாம். மரியன்னையின் பெற்றோர் சுவைக்கீன் அன்னம்மாள் தமக்கு குழந்தை பாக்கியம் வேண்டுமென்று செபிக்ககொடையாகக் கொடுக்கப்பட்டவரேமரியா. இவர்களுக்குத் தெரிந்தது இவ்விடயம் மட்டுமே. ஆனால் இறைவனின் திட்டத்தில் மீட்பரை பெற்றுக் கொடுக்கும் சிறப்பான கருவியாக மரியா ஆயத்தப்படுத்தப்பட்டு வந்துள்ளார். இன்று மரியாவை மீட்பரின் தாய் என்றும் இயேசுவின் தாய் என்றும் போற்றுகின்றோம். இன்றும் அவர் உலக மீட்பிற்காக செபித்து வருகிறார்.

இம் மாதம் 10ம் திகதி கிராமிய நடனப் போட்டி நடைபெறவுள்ளது. எமதுபாரம்பரிய கலைகள் மங்காமல் அவை புதுப்பொழிவு பெற இது போன்ற போட்டிகள் பெரிதும் உதவும். இப் போட்டிக்கான ஆயத்த கருத்தரங்கும் நடைபெற்றது. அனைவரும் ஆர்வமாய் உள்ளார்கள். அனைவரும் கலைஞர்களை ஊக்கப்படுத்தி வாழ்த்துவோம். இவற்றை ஒழுங்கு செய்த அருட்தந்தை றொகான் பேனாட் அடிகளுக்கும் இவரோடு உழைக்கும் ஒவ்வொரு வருக்கும் எமது வாழ்த்துக்கள்

14ம் திகதி திருச்சிலுவையின் மகிமைப் பெருவிழா. அவமானத்தின் சின்னமாகக் கருதப்பட்ட சிலுவையிலதொங்கி மரித்த இயேசு தனது உயிர்ப்பின் மூலம் மனித இனத்திற்கேமீட்பைக் கொண்டுவந்தார். இன்று திருச்சிலுவை எமது வெற்றியின் சின்னமாகவம் மீட்பின் சின்னமாகவும் விளங்குகிறது. பலருக்கு சிலுவை ஆடம்பரப் பொருளாக இருந்தாலும் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவருக்கும் சிலுவைவெற்றியே.

இத்தினத்தில் திருச்சிலுவைக் கன்னியர்கள் தமது சபையின் விழாவை சிறப்பிக்கின்றார்கள். எமது மறைமாவட்டத்தில் இவர்கள் உப்புவெளியில் முதியோர் இல்லத்தையும் சிறுவைத்தியசாலை யையும் பராமரிக்கிறார்கள். மேலும் முன்பள்ளி, பங்குப் பணிகளிலும் அர்ப்பணத் தோடு ஈடுபடுகின்றார்கள். அவர்களை நாம் வாழ்த்துவ தோடு இவர்கள் பணி சிறக்க செபிக்கிறோம். இம் மாதம் 05 முதல் 17 வரை புதிய ஆயர்களுக்கான சிறப்புக் கருத்தரங்கு உரோமையில் நடைபெறுகிறது. இதில் நானும் கலந்துகொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான் 04ம் திகதி வத்திக்கானில் ஞாயிறு முத்திப்பேறுபெற்ற அன்னை தெரேசாவின் புனிதர் நிலைக்கு உயர்த்தும் திருப்பலியிலும் கலந்து கொள்வேன். எமது பயணம், பங்கேற்கும் கருத்தரங்கு பயனுள்ளதாக அமைய செபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந் நாட்களில் உங்கள் தேவைகளுக்கு மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிங்ஸ்லி றொபேட் அடிகளை அணுகும் படிகேட்டுக்கொள்கிறேன்.

இம் மாதம் 17ம் திகதி கிளரீசியன் சபையைச் சேர்ந்த குருக்கள் இலங்கையில் தமது பணி தொடங்கிய 25ம் வருட நிறைவை சிறப்பிக்கிறார்கள். மறைபரப்புப் பணியிலும், புத்தகங்கள் வெளியிடும் பணியிலும் இவர்கள் சிறப்பாக ஈடுபடுகின்றார்கள். இவர்களை வாழ்த்தும் அதேவேளை இவர்கள் பணி தொடர, சிறக்கசெபிப்போம்.

23ம், 24ம் திகதிகளில் தேசியபொதுநிலையினர்க்கான கூட்டம் திருகோணமலையில் நடைபெறவுள்ளது. பொதுநிலையினர் தமது குடும்பத்தோடு மட்டும் தமது பணியை மட்டுப் படுத்தாமல் சமூகம்,பங்கு,மறைமாவட்டம் என்று தமது பணியை பெருக்கவேண்டும். திருச் சபையின் வளர்ச்சிக்காக பலர் முன்வரவேண்டும். இக் கூட்டத்தின் போது இவர்கள் தமது மறைமாவட்டங்களில் தமது பணிகள் பற்றி பகிர்ந்து கொள்வார்கள். இவர்களது வருகை, ஒன்றுகூடல்,பகிர்வுகள் பயனுள்ளதாக அமைய வாழ்த்துகின்றோம்.

☞ தொடர்ச்சி 4ம் பக்கம்

## அன்னை தெரேசா அவர்களின் புனிதர் பட்ட நிகழ்வு









❖ செப்ரம்பர் 4ம் திகதி காலை 10.30 மணிக்கு அதாவது இலங்கை நேரம் பி.பகல் 2.00 மணிக்கு வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் திருத் தந்தை பிரான்சிஸ்சினால் அன்னை தெரேசாவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

❖ பல நாடுகளிலுள்ள தலைவர்கள், பிரதி நிதிகள், கத்தோலிக்கர்கள், பிற கிறீஸ்தவ சபை, மற்றும் பிறமதப் பிரதிநிதிகளும் இத் திருப்பலியில் பங்கெடுத்தனர்.

❖ முன் வரிசையில் 1500 ஏழைகள் அமர்ந்திருந்தனர்.

❖ தூய அன்னை தெரேசாவின் பெற்றோரின் பூர்வீக நாடான அல்பேனிய அரசுத்தலைவர், பிரதமர், துணைவி யார்களும் கலந்து கொண்டனர்.

❖ தூயஅன்னை தெரேசா பிறந்த மசடோனியா நாட்டின் அரசத் தலைவர் துணைவியாரும் மேலும் பல திரளான மக்களும் கலந்து கொண்டனர்.

❖ அன்னையிடம் இருந்த சொத்து 3 வெள்ளைச் சேலைகளும், ஒரு சிலுவையும், ஒரு செபமாலையும், தான், ஆனால் விலை மதிப்பற்ற அன்பை மட்டும் அவர் அமுத சுரபியாக அள்ளி வழங்கினார்.

❖ ஒரு கவிஞர் 'சாக்கடை யோராச் சந்திக்கும் சாமரம் வீசிய பூமரம்' என அன்னையைப் புகழ்ந்தார்.

❖ பிறரன்பிற்கு புதிய இலக்கணத்தை வகுத்த தூய அன்னை தெரேசாவிடம் சிறப்பாகச் செபிப்போம். அவரின் எடுத்துக்காட்டான வாழ்வை நாமும் பின்பற்ற முயற்சிப்போம்.

## அமல உதயத்திற்கு புதிய முதல்வர்



திருமலையில் அமைந்திருக்கும் அமல உதய நிறுவனத்தின் முதல்வராக ஆவணி மாதம் 6ம் திகதி அருட்தந்தை பி.ஜேக்கப் யோகராஜா அ.ம.தி அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் வைத்தியசாலைப்பணி மறையுரைப் பணி, ஆசிரியப் பணி, குருமட மாணவர்கள் உருவாக்கல் பணி, பல பங்குகளில் பங்குத்தந்தையாகவும் வன்னிப்பிரதேச இடம் பெயர்ந்த மக்களுக்கும் பணியாற்றியவர் அமலமரித் தியாகிகளின் அனைத்து இல்லங்களிலும் நிதிபொறுப்பாளராக பல வருடங்கள் பணியாற்றி இருக்கிறார்.

இவர் குருத்துவப்பணியில் 22 வருடங்களை (19.08.1994) நிறைவு செய்தவர். இவர் தற்போது திருகோணமலை அமல உதயத்தின் முதல்வராகவும் மாணவர் விடுதியின் பொறுப்பாளராக வும் தி/தூய சூசையப்பர் கல்லூரியின் பகுதி நேர ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். இவரின் பணிவாழ்வு சிறக்க

**செபிப்போம் வாழ்த்துவோம்.**

## 123 வருட இறைஆசீரின் நிறைவு ஆண்டு (1893-2016) 25.08.2016.



கடந்த 25.08.2016 அன்று பி.ப.5.30 மணிக்கு தூய மரியாள் பேராலயத் தில் 123ம் வருட இறை ஆசீரின் நிறைவு ஆண்டு கூட்டுத் திருப்பலி மறைமாவட்ட ஆயர் அதி.வந்.கிறிஸ்ரியன்நோயல் இம்மானுவேல் ஆண்டகை. தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**செபிப்போம் வாழ்த்துவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் எல்லாரிலும் சிறியவரே பெரியவர் ஆவார்.(தூய லூக்9:48)"

## உங்களோடு பேசுகிறேன்...

அருட்பணி. N.C. அருள்வரதன்

ஆவணி மறைந்து புரட்டாதி பிறக்கும் புதிய மாதம் இம் மாதத்திலும் மீண்டும் உங்களோடு பேசக்கிடைத்த வாய்ப்பை எண்ணி என் மனம் மகிழ்கின்றது.

இம்மாதத்தின் ஆன்மீக நாட்களை நோக்கும்போது எட்டாம் திகதி அன்னை மரியாளின் பிறந்த நாளைக்கொண்டாடுகின்றோம். 14ம் திகதி.திருச்சிலுவையின் மகிமையின் விழாவைக் கொண்டாடு கின்றோம். 27ம் திகதி தூய வின்சன் டீபோலின் விழாவைக் கொண்டாடுகின்றோம்.

14ம் திருச்சிலுவை சபையின் தங்கள் விழாவை அதே நாளில் சிறப்பிக்கிறார்கள்.திருச்சிலுவை சபையினரின் பணிவாழ்வு சிறப்புறவும் தூய வின்சன் டீ போல் சபையினரின் சமூகப் பணிகள் இன்னும் சிறப்புறவும் வாழ்த்துகின்றோம் வேண்டுகின்றோம்.

ஆலய விழாக்களைப் பார்க்கும் போது இம்மாதத்திலே 04ம் திகதி சாம்பல்தீவு இறை மக்கள் தூய திருமுழுக்கு யோவானின் விழாவைக் கொண்டாடுகின்றார்கள். பதினோராம் திகதி ஆண்டாங்குள மக்கள் வேளாங்கண்ணி ஆலய விழாவை கொண்டாடுகின்றார்கள் 18ம் திகதி திருமலை பொது வைத்தியசாலையில் இருக்கும் வேளாங்கண்ணி விழாவையும் கொண்டாடுகின்றார்கள் 18ம் திகதியிலே கப்பல்துறை இறைமக்கள் அமைதியின் அரசியின் விழாவையும் ஆத்திமோட்டை இறைமக்கள் திருச்சிலுவை விழாவை இதே தினத்திலும் கொண்டாடு கின்றார்கள். மேலும் 25ம் திகதி குவாடலுப்பே அன்னையின் விழாவையும் கொண்டாடுகின்றார்கள். இதே நாளில் தேசிய மறைக்கல்வி தினம் கொண்டாடப் படுவதையும் நினைவூட்டுகின்றேன்.

விழாக்களைக் கொண்டாடும் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

சர்வதேசரீதியான நிலைகளைப் பார்க்கும் போது இம்மாதத்திலே "எழுத்தறிவுதினம்" "செவிப்புலனற்றோர் தினம்" சுற்றாடல் தினம் என்பனவும் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொன்றின் தேவைகளையும் முக்கியத்து வங்களையும் உணர்ந்து செயலாக்கங்களிலே வெற்றிகளைக்காண வாழ்த்துகின்றோம்.

நாட்டையும் நாட்டின் அரசியலையும் நோக்கும் போது மக்கள் மத்தியிலே பலதரப்பட்ட கேள்விகள் எழுந்தவண்ணமிருக்கின்றன. எதிர்க்கட்சி ஒன்றுபட்ட எதிர்க்கட்சி கட்சிமாற்றம் பதவி நீக்கம் கைதுகள் என்பவைகளால் எது உண்மை எது பிழை எவரின் பிழை என்பதை புரிந்து கொள்ள முடியாமல் பதறிய நிலைகளே காணப்படுகின்றன.

பதட்டங்களும் சலசலப்புக்களும் நீங்கி அமைதியையும் ஆறுதல்களை யும் நீதிநிலைகளையும் மக்கள் உணரும் போது ஆட்சியின் வெற்றியாக இதனைக் கருத முடியும்.

எனவே மக்களின் மகிழ்ச்சியும் மன அமைதிகளும் உருவாகி நீதியின் கதிர்களிலே அனைவரும் ஆறுதல்காண வாழத்திக்கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறிநிற்கின்றேன்.



### மறைக்கல்வி சிந்தனை

குடும்பத்தில் மறைக்கல்வி கற்பிப்பது ஒரு தனித்தன்மை வாய்ந்த செயல் வேறு எதனாலும் அதை ஈடு செய்ய இயலாது"

**(திருத்தந்தை தூய 2ம் ஜான்போல்)**

"மறைக்கல்வியின் தனிப்பட்ட நோக்கம் இன்னும் தொடக்க நிலையிலுள்ள விசுவாசத்தை இறைவனின் அருட்துணையால் வளர்ப்பதும் இளவயதினர் முதிர் வயதினரான விசுவாசிகளின் கிறீஸ்தவ வாழ்வுக்கு நாளுக்கு நாள் உணவூட்டி அதை நிறைவுக்குக் கொண்டு செல்வதாகும்.

**(திருத்தந்தை தூய 2ம் ஜான்போல்)**

## துறவற அர்ப்பணமும் திருச்சிலுவையை தாங்கிய கன்னியர்களின் வாழ்வும்

அருட் : சகோதரி : றோமலா அன்ரனி (H.C)

அர்ப்பணத்தை வாழ்பவர்கள் இறையரசிற்காக தம் வாழ்வை தியாகம் செய்து இறை மகிமைக்காக தம்மை நறுமணப்பலிப்பொருளாக்குகின்றனர். கிறிஸ்துவின் மனநிலைகளால் வாழ்வை வளமாக்கி நிறை உண்மைகளை நோக்கி வழி நடத்தும் தூய ஆவியின் செயற்பாடுகளுக்கு விட்டுக்கொடுத்து இறையரசிற்காக தம் உடல் பொருள் ஆவி ஆற்றல் திறமை சக்தி நேரம் உழைப்பு அனைத்தையும் தாராள மனதுடன் அர்ப்பணமாக்குகின்றனர்.

துறவற வாழ்விற்கென இறைவனே தமக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கின்றார். இறைவனின் தெரிவுகள் வித்தியாசமானவை பலமும் பலவீனமும் கொண்டவர்களை இறைவன் தேர்ந்தெடுத்து உலகிலிருந்து வேறாக்கி மதிப்புள்ளவர்கள் ஆக்குகின்றார்.(யோவான் 15:16)

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் துறவற அர்ப்பணஞ் செய்யப்பட்டவருக்கான தமது சுற்றுமடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். துறவற அர்ப்பணம் செய்தவர்கள் வாழுமிடத்தில் மகிழ்ச்சி கிறீஸ்துவின் அன்பு நிறை பிரசன்னம் வெளிப்படவேண்டும். துறவறத்தவர்கள் சமுதாயத்தின் விளிம்புகளுக்குச் சென்று துன்புறும் மக்களுக்கு உதவுவதுடன் பிரச்சினைகளைத் தாண்டி மகிழ்வுடன் வாழ்ந்து மகிழ்வை கொடுப்பவர்களாக செயல்படவேண்டும் என வலியுறுத்துகின்றார்.

துறவற அர்ப்பண வாழ்வு வாழ்வோர் கிறிஸ்துவை பின்பற்றுவதையே தம் உயரிய வாழ்க்கை முறையாக கொண்டிருப்பார். இறைவனுக்குரிய காரியங்களை ஆழ்ந்து தியானிப்பதிலும் இறைவேண்டலில் ஈடுபடுவதிலும் அவரோடு ஒன்றிணைந்திருப்பதிலும் முதன்மையாக கொண்டு செயற்படுவர். ஒவ்வொரு நாளும் திவ்விய நற்கருணைப்பலியில் பங்கேற்பதும் திருப்புகழ் மாலை ஓதுவதும் அன்னைமரியாவின் திருச்செபமாலையை தவறாது சொல்வதும் அவர்களது கடமையாகும். அத்துடன் ஒவ்வொரு துறவற சபையிலும் அவர்களுக்குரிய விருதுவாக்கிற்கேற்ப இறைத்தூதுப்பணியை மேற்கொள்கின்றன.

இந்த வகையில் திருச்சிலுவைக் கன்னியர்களாகிய எமது சபை "சிலுவையில் தான் இரட்சணியம்" என்பதனை விருதுவாக்காகக் கொண்டு 1844-ம் ஆண்டு மூன்று அருட்சகோதரிகளுடன் அன்னை பேணாடா (Our Foundress) உட்பட ஆரம்பித்த குழுவின் தலைமையில் இறைதுணையுடன் சுவிற்சலாந்திலுள்ள மென்சிங்கன் என்னுமிடத்தில் தமது பணியை ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு ஐரோப்பாவில் முளைத்தெழுந்த எமது திருச்சிலுவைக் கன்னியர் சபையானது இறைவனின் பராமரிப்பிலும் வழிநடத்துதலிலும் விருட்சமாகி கடல் கடந்தும் தனது கிளைகளை பரப்பியது. தென் அமெரிக்கா ஆபிரிக்கா ஆசியா ஆகிய கண்டங்களுக்கும் பரவி இறையரசை நிலை நாட்டியது. இன மத மொழி பேதம் யாவும் மறந்து இறை இயேசுவின் நற்செய்திக்கு சான்றாக வாழ்ந்து தெய்வீக விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் அன்பிலும் மக்களை ஆழப்படுத்தி வந்தது.

இந்த வகையில் 1930-ம் ஆண்டு ஆடித்திங்கள் 26-ம் திகதி இலங்கைத் தீவில் யாழ்மண்ணில் ஊர்காவற்றுறை என்னும் ஊரில் எமது திருச்சிலுவைக் கன்னியர் சபையானது வெளிநாட்டு மூன்று அருட்சகோதரிகள் மூலம் கால் பதித்து இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க வாழ்க்கையாலும் அன்பு நிறை வார்த்தைகளாலும் இயேசுவின் அன்பை பரிமாறி மக்களின் மனங்களில் இடம் பிடித்தார்கள். மக்களின் அன்பும் ஆதரவும் வரவேற்பும் பக்கபலமாக இருக்க அருட்சகோதரிகளின் பணியின் எல்லையும் ஊடறுத்து பரந்து விரிந்து இலங்கையின் பல மாகாணங்களிலும் தனது குழும மடங்களை நிறுவி அகலக் கால் பதித்தது.

சமூக பொருளாதார அரசியல் ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க மக்களோடு மக்களாக பணி புரிய பல்வேறு வகையான பணிகளை எமது திருச்சிலுவைக் கன்னியர்கள் ஆற்றத் தொடங்கினர்.

- ❖ குழந்தைகளுக்கும் இளையோருக்கும் கல்வியறிவு புகட்டுதல்
- ❖ முதுமையிலும் தனிமையிலும் நோயிலும் வாடும் மனித உள்ளங்களை அரவணைத்து பராமரித்தல்.
- ❖ பின் தங்கிய பிரதேசங்களில் சுகநலப்பணி வைத்தியசாலைகளை நிறுவி மருத்துவப்பணி தாதியர் பயிற்சி பாடசாலைகள் அமைந்து இளம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கல்.
- ❖ ஏழைகள் அநாதைகள் விதவைகள் வலுவிழந்தோருக்கு உதவிகள் புரிந்து மறுவாழ்வு அளித்தல்
- ❖ ஆற்றுப்படுத்துகை மகிழ்ச்சிப்படுத்தல் மூலம் சிறுவர்கள் இளையோர்கள் பெரியோர்களின் உள்ளத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தல்.
- ❖ திருப்பலி திருவழிபாடுகளில் மக்களுக்கு உதவி புரிதலும் மறையறிவை வளர்ப்பதிலும் ஈடுபடல்.
- ❖ இளையோருடன் சமூகப் பணி மனித உரிமை விழிப்புணர்வு சமாதானத்தை நிலை நாட்டல் போன்ற பணிகளிலும் எமது அருட்சகோதரிகள் முன்னின்று உழைத்தனர்.

இங்கனம் வெளிநாட்டு அருட்சகோதரிகளும் தமது சுதேச அருட்சகோதரிகளும் கூட்டாக இணைந்து செயற்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் 1963-ம் ஆண்டு இலங்கை அரசு மேலை நாட்டவர் அனைவரையும் நாட்டைவிட்டு வெளியேறும்படி கட்டளை பிறப்பித்தது.

திக்கு திசை தெரியாது தத்தளித்த திருச்சிலுவைக் கன்னியர் சபை ஒருவாறு சமாளித்து விழித்துக் கொண்டது. சட்டென எழுந்த புயல் தணிய காலம் எடுத்ததுடன் இதனால் ஏற்பட்ட பாதிப்புக்களை ஈடுசெய்ய இறைவனின் பராமரிப்பும் வழிநடத்துதலும் எமது சபைக்கு ஆசீர்வாதமாக கிடைத்தன.

எமது சுதேச அருட்சகோதரிகள் அர்ப்பணிப்புடனும் தணியாத தாகத்துடன் எமது சபையின் பொறுப்புக்களை தலைமையேற்று சோதனைகளையும் சவால்களையும் எதிர் நீச்சலிட்டு கவலைகளையும் சோகங்களையும் தாங்கி புதிய பாதையில் எமது சபையை வழிநடத்தினார்கள். இவர்கள் அமைத்த பாதையில் இன்று 120 அருட்சகோதரிகளை தன்னகத்தே கொண்டு ஏறக்குறைய 20 குழுமங்களை நமது நாட்டின் பல பாகங்களிலும் நிறுவி இன மத மொழி பேதங்களைக் கடந்து வெற்றி நடைபோடுகின்றது என்றால் மிகையாகாது.

ஒவ்வொரு வருடமும் புரட்டாதித் திங்கள் 14-ம் திகதி திருச்சிலுவைக் கன்னியர் சபையின் திருவிழாவாக திருச்சிலுவையின் மகிமை திருச்சபையில் கொண்டாடப்படும் நாளில் சிறப்பாக நினைத்து சிறப்பிக்கின்றார்கள். சிலுவையே கிறிஸ்தவ வாழ்வின் மகிமை. அதுவே நமது உன்னத அடையாளம் திருச்சிலுவைக்கு இயேசு தமது மரணத்தினால் அர்த்தம் கொடுத்தார். அவமானத்தின் சின்னமாகிய சிலுவையை மீட்பின் சின்னமாக வாழ்வின் சின்னமாக மாற்றியமைத்தார்.

எம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் சிலுவை இல்லாம் சிகரம் எட்ட முடியாது.சிலுவையை சந்திக்காத மனிதன் முழுமையான மனிதனாக மாற முடியாது. (மத் 16:24-28) "என்னைப்பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்." என்னும் இறை இயேசுவின் ஆழமான பொன்மொழிக்கிணங்க திருச்சிலுவையை தம் நெஞ்சத்தில் தாங்கி சிலுவையை தம் வாழ்வில் சுமந்து இயேசுவின் வழி தொடரும் திருச்சிலுவைகன்னியர் சபைஇன்னும் பல உள்ளங்களை இறைவன்பால் ஈர்க்கவும் தமக்கு வரும் சவால்களை சாதனைகளாக மாற்றி இயேசுவின் அர்ப்பணமுள்ள சீடத்திகளாக இப்பாரின் பல பகுதிகளிலும் பணிபுரிந்திட இறை ஆசிகள் எம்மை நிரப்பட்டும்.

**வாழ்க திருச்சிலுவை!**
**வளர்க இயேசுவின் புகழ்!**
**வாழ்ந்து காட்டிய உம் பாதைதனில்**
**வாஞ்சையுடன் தொடர்கின்றோம் நின் பாதையை**
**வழிகாட்டும் விமலனே உம் பணிக்காக**

**துயரின்றி பிறர் வாழ துணையாவேன்**
**உறவின்றி வாழ்வோரின் இதயத்தில்**
**அன்புறவாய் நான் மாறி உம்மைக் கொடுப்பேன்**
**பிரிந்த உறவுகள் இணையவும்**
**மனித மாண்பு நிலைக்கவும்**
**என் வாழ்வை தீபமாக்குவேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் ஆண்டு சிறப்புப் போட்டிகள்

## இரண்டாம் இடம் பெற்ற சிறுகதை

## அர்த்தமுள்ள இரக்கத்தின் ஆண்டு

மனைவி சரயுருத் கொடுத்த டீயை குடிப்பதற்கே மனசு இடமளிக்கவில்லை ஜெயராஜிக்கு.

"என்னங்க"?கணவனின் தோளை உலுக்கினாள் சரயுருத்.

"ம்...ம்....ஒன்னுமில்லை."சுயநினைவுக்கு வந்தவன் டீயை குடிக்கத் தொடங்கினான். என்னவோ போங்க.நகர்ந்து விட்டாள்.டீயை உறிஞ்சினாலும் மனசு லேசாக வலித்தது.அந்த வலியினூடே மனமும் எங்கோ சென்றது.

அன்று காலை 9.00மணி "இறைவனின் குரல்" வானொலி நிலையம் நிகழ்ச்சிக்காக தயாராகிக் கொண்டிருந்தான் ஜெயராஜ். விளம்பரம் முடிந்து கிறிஸ்தவ மணித்தியாலச் செய்திகளும் நகர்ந்து விட்டன.ஜெயராஜிடம் ஒலிவாங்கி கைமாற்றப்பட்டது.

"அன்பு நேயர்களே இறைவனின் குரல் என்ற இந்த கிறிஸ்தவ வானொலியில் தற்போது இடம் பெறவுள்ள நிகழ்ச்சி உங்களின் மனம் திறந்த உள்ளக் குமுறல். இந்த இரக்கத்தின் ஆண்டில் நீங்கள் இரக்கத்தை இழந்த சந்தர்ப்பங்கள் அல்லது நீங்கள் இரக்கத்தை வழங்கிய சந்தர்ப்பங்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளலாம். பகிர வேண்டிய தொலைபேசி எண்களை தனக்கே உரிய பாணியில் குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் நிகழ்ச்சி பற்றிய தகவலை முன்வைத்தான் ஜெயராஜ்.

தன்னை நெறிப்படுத்திய சீனியர் அறிவிப்பாளர் அருகில் இருப்பது ஜெயராஜிக்கு பக்கபலமாக இருந்தது.நேயர்களின் நேயர்களின் விருப்பப் பாடலை ஒலிப்பரப்புவதற்கு தனித்தனியாக இருவர் கொண்ட குழு எதிர் கண்ணாடி அறையில் தயாராகிக் கொண்டிருந்தது. தொலைபேசி அழைப்புக்கு இருவருமான நிகழ்ச்சி ஆரம்பமானது.

மீண்டுமாக தலைப்பினை தனது மதுரக் குரலால் ஒலிவாங்கியூடாக காற்றினில் கலக்க விட்டானஜெயராஜ்.நிகழ்ச்சி ஆரம்பமாகி..... சிறப்பாக நகர்ந்து கொண்டிருந்தது.வந்த அழைப்புக்களின் உள்ளக் குமுறல்களை கவனமுடனும் சிறப்பாகவும் செவிமடுத்து உரையாடினான்.அதிகமான அழைப்புகள் பெண்களிடமிருந்தே வந்தது.கணவனின் இரக்கமின்மை மாமியாரின் இரக்கமின்மையற்ற செயல்..... மற்றும் ஓரிரண்டு பாடசாலை மாணவர்கள் தாங்கள் இரக்கத்தை பெற்ற சந்தர்ப்பங்கள்.அதன் சம்பவங்களென்று பலவிதமான அனுபவங்களுடன் நிகழ்ச்சி நகர்ந்ததுசிறிய விளம்பர இடைவேளை வரவும் தண்ணீராலகுரலை நனைத்துக்கொண்டான் ஜெயராஜ். நிகழ்ச்சி முடிவடைவதற்கு பன்னிரண்டு நிமிடங்களே இருந்த நிலையில் ஒரு அழைப்பு.

ஹலோ வணக்கம்" வணக்கம் தம்பி இது இறைவனின் குரல் வானொலியா? ஆம் ஐயா சொல்லுங்கள் உங்களின் பயரென்ன? பெயரைக் கூறியவர் ற்று நேரம் அமைதியானார். ஐயா என்ன அமைதியா கிட்டீங்க? "தம்பி எங்களுக்கு ஒரு மகன். எங்கட உலகமே அவன் என்டு தான் வாழ்ந்தம். பாத்து பாத்து வளர்த்தம். படிக்க வச்சம் நல்ல இடத்திலே கலியாணமும் செஞ்சு வச்சம்.... அவரின் சோகங்களை நீண்டதாக பகிர்ந்தார். "ஐயா இப்ப நீங்க எங்க இருக்கிறீங்க. "முதியோர் இல்லத்துல தமபி" சரி ஐயா உங்கட மருமகள்உங் கட மகனோட மனசமாத்தியிருக்கலாம் தானே." இல்ல தம்பி மருமகள் அருமையான பிள்ள. எங் க ரெண்டுபேரையும் இங்க அனுப்பக் கூடாதென்டு மகனோட சண்டையெல்லாம் போட்டது.ஆனா மகன் கேக்கல.பொருளாதார சிக்கல். இடப்பிரச்சின என்டு எங்கள பாரமா நினைச்சி இங்க கொண்டு வந்து விட்டான். "ஐயா உங்கட மகன் உங்கள வந்து பார்க்கின்றவரா"?

இந்த மூன்று வருஷத்தில ஒரு தடவையும் வரல தம்பி ஆனா மருமக மகனுக்கு தெரியாம பேரப்பிள்ளைகள கூட்டிட்டு வந்து பாத்திட்டு போகும். ஐயா உங்கட மகனோட பெயரைச் தெரிச்சிக்கலாமா? வேண்டாம் தம்பி இந்த நிகழ்ச்சிய நிறைய பேர் கேப்பாங்க. வேணாம்.... என்ட பேர் சூசைதாஸ் என்ட மனைவியோட பேர் லூர்த்துமேரி.எப்படியோ சமாளித்துக் கொண்டு நிகழ்ச்சியை நிறைவுக்கு கொண்டு வந்து எல்லோரிடமும் பாராட்டும் நற்பெயரும் பெற்றான் "சூசைதாஸ் லூர்த்து மேரி மகன் ஜெயராஜ்"

.....———.....———

"என்னங்க இன்னுமா டீ குடிக்கிறீங்க"

குரல் கேட்டு நிமிர்ந்தவன் டீ கோப்பையை அவளிடம் நீட்டிய படி"உடனே புறப்படு சரயு" எங்க கிளம்பச் சொல்றீங்க?

"முதியோர் இல்லத்திற்கு"முதியோர் இல்லத்திற்கா ஏன்?

"அம்மா அப்பாவ கூட்டி வர.சரயுருத்தின் முகத்தில் இருந்த சந்தோசம் ஆண்டை அர்த்தமுள்ளதாக காட்டியது. முற்றும்.


**திருமதி.யோசப் ஜெபநாயகம் அனஸ்ரி அமலராணி**

இல.101காந்திநகர்

அன்புவழிபுரம்

திருகோணமலை.

பங்கு: சதாசகாய மாதா ஆலயம்.


சென்றமாத தொடர்ச்சி.........

## இரக்கம் என்பது கடவுளின் திருப்பெயர்

### 02.இரக்கமுள்ள படைக்கும் இறைவன்

வால்டேல் கஸ்பார் எனும் ஜெர்மானிய கர்தினால் "Mercy" (மெர்சி) எனும் அழகிய நூலைவெளியிட்டுள்ளார். இரக்கத்தை அவர் வரையறுக்கும் போதுஅவர் கூறுகிறார். இரக்கமஎன்பது அடுத்தவரின் குழப்பமான கலக்கமான அச்சுறுத்தும் சுழலில் நுழைந்து அமைதியும் ஒழுங்கையும் கொண்டு வர உதவுவது. "ஆம் தொடக்கத்தில் கடவுள் விண்ணுல கையும் மண்ணுலகையும் படைத்த பொழுது மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மேல் இருள் பரவியிருந்தது" (தொநூ1:1-2). தொடக்கத்தில் உலகு வெறுமையில குழப்பத்தில இருளில் இருந்தது. இரக்கமுள்ள கடவுள் அங்கு நுழைந்து சீர்படுத்துகின்றார். இருளிலிருந்து ஒளிக்கும் வெறுமையிலிருந்து நிறைவுக்கும்ழுங்கற்ற தன்மையிலிருந்து நேர்த்திக்கும் இறைவன் வழியமைக்கிறார். எவ்வளவு அழகான உலகை ஒழுங்கு மிகு (Orderly) உலகை அவர் உருவாக்குகின்றார். ஏழு நாட்களின் உழைப்பில் உன்னத உலகம் இரவென்றும் பகலென்றும் இரு வேளைகள் இரண்டையும் ஆள இரு பெரும் சுடர்கள் கடல்என்றும் கட்டாந்தரை என்றும் இரு பெரும் பரப்புக்கள் இருவேறு வரையறைகள் ஆணென்றும் பெண்ணென்றும் இரு பேரினங்கள் இருவருக்கும் தனித்தனி பண்புகள் கடவுளே ஏழாம் நாளில் தாம் படைத்த அனைத்தும் "நல்லது" எனக் காண்கின்றார் (தொநூ1:31)

அடுத்தவரின் குழப்பத்தில் குளிர் காய நினைப்பது அறீ வீனம். மற்றவரின் கலக்கத்தில் உடுக்கை இழந்தவன் கை போல ஒடோடி உதவுவதே தெய்வீகம்.இது இரக்கத்தின் இனிய முகம். இதை இயேசுவும் வலியுறுத்திப் பேசுகிறார்.நல்ல சமாரியன் உவமையில (லூக 10:25-37) உயிருக்குப் போராடி குழப்பத்தில் தவித்து கிடக்கும் அடிபட்டவனின் "அச்சுறுத்தும் உலகில்" நுழைய குருவுக்கும் லேவியருக்கும் மனமில்லை (லூக்10:31-32) மாறாக குற்றுயிரும் குலை உயிருமாய் போராடும் மனிதரின் "குழப்ப -(Chaotic) உலகில் சமாரியன் வலிய நுழைகிறார். அங்கு குணத்தையும் நலத்தையும் அன்பையும் ஆற்றுப்படுத்தலையும் கொண்டு வருகிறார். இதுவன்றோ இரக்கம் காட்டும் இனிய மனது.எங்கெல்லாம் எனக்கெதற்கு வமபென்று விலகிச்செல்கின்றோமா அங்கெல்லாம் இதயமற்ற இரக்கமற்ற மனிதர்களாக வாழ்கின்றோம் என்பதே உண்மை.காய்கறி வாங்கப்போன என் நண்பர் குருவின் தந்தை மாரடைப்பால் சரித்து விழுந்தார்.விலகிச் சென்ற பலரின் பாராமுகத்தால் ஒரு அன்பான பக்திமிக்க தந்தையை இழந்து கதறும் குருவைக் கண்டு நான் கலங்கினேன். விலகிச் செல்லும் "மெத்தனமும் பாராமுகமும்" இரக்கமற்ற அரக்க குணத்தின் அவதாரங்கள்.இறைவன் என்றும் விலகி ிற்பவர் பக்கமல்ல.வலிய வந்து கனிவுகாட்டும் அன்பரகளின் அருகில் இருக்கிறார் என்பதை உணர்ந்து உதவ விரைவோம்.

தொடரும்.......................................

## கவிதையை காட்சியாக்குவோம் போட்டி

**பங்குபற்றியவர்கள் – 07பேர்**

**பரிசுக்குரியவர்கள்**

**1ம் பரிசு 400/= ரூபா**

ஏ.எப்.ஜி.சாதனா.
இல:134/4 சின்னக்கடை
மன்னார்.

**2ம் பரிசு300/= ரூபா.**

சரவணபவன் தரோன்சன்
இல:89அந்தோனியார் வீதி
நித்தியபுரி
திருகோணமலை.

**3ம் பரிசு200/= ரூபா**

ஆர்.எமில்ராஜ்
இல:48 நித்தியபுரி
திருகோணமலை.

## மாணவர்களுக்கான ஏழுவரி கவிதைப்போட்டி

**பங்குபற்றியவர்கள் – 12 பேர்**

**பரிசுக்குரியவர் ஒருவரே 500.00 ரூபா**

எஸ். ஜெனாத்தனன்
பெரியகுளம்,
சாம்பல்தீவு.

### சரியான கவிதை வரிகள்

இரங்கிடும் இதயங்கள்
பெரிகிடும் போது அவை
கலங்கிடும் கண்களின் துயர்நீக்கியே
துயர்களைக் கண்டு துணை செய்யுமே
கனிவான நிலையினைக் காட்டியவை
புதிதான வாழ்வுக்கு வழிசமைக்க
பொங்கியே இதயங்கள் மகிழ்ந்திடுமே.

## திருகோணமலை மறைமாநிலபங்குகள் ஆணைக்குழுக்கள் மற்றும் கன்னியர் இல்லங்களிலிருந்து எகெட்கரித்தாஸ் பணியகத்தினூடாக சேகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான தவக்கால ஒறுத்தல் சேமிப்புவிபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தூயலூர்துஅன்னைதிருத்தலம் | - பாலையூற்று | - 255, 92.00 |
| 2. | தூயகுவாடலூப்பேஅன்னைதிருத்தலம் | - சின்னக்கடை | - 23,125.00 |
| 3. | எகெட் கரித்தாஸ் பணிப்பாளர், பணியாளர்கள் | - திருகோணமலை | - 21,139.00 |
| 4. | புனிதசூசையப்பர் ஆலயம் | - நிலாவெளி | - 10,000.00 |
| 5. | புனிதமரியாள் பேராலயம் | - பெரியகடை | - 10,000.00 |
| 6. | இறை இரக்கத்திருத்தலம் | - அலஸ்தோட்டம் | - 9,020.00 |
| 7. | புனிதஅந்தோனியார் ஆலயம் | - மூதூர் | - 6,000.00 |
| 8. | ஆரோக்கியமாதாஆலயம் | - தம்பலகாமம் | - 5,730.00 |
| 9. | குழந்தையேசுஆலயம் | - உவர்மலை | - 5,273.00 |
| 10. | தூயசெபமாலைமாதாஆலயம் | - குச்சவெளி | - 4,400.00 |
| 11. | தூயவனத்துஅந்தோனியார் ஆலயம் | - செல்வநாயகபுரம் | - 2,700.00 |
| 12. | புனிதஅந்தோனியார் ஆலயம் | - சீனக்குடா | - 2,500.00 |
| 13. | திருஇருதயஆண்டவர் ஆலயம் | - இருதயபுரம் | - 2,500.00 |
| 14. | தூயசகாயமாதாஆலயம் | - கந்தளாய் | - 2,050.00 |
| 15. | தூயதிரேசம்மாள் கன்னியர் மடம் | - மூதூர் | - 2,000.00 |
| 16. | கிறீஸ்து அரசர் ஆலயம் | - கன்னியா | - 1,000.00 |

**மொத்தசேகரிப்பு 133,029.00**

பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ் உதவு தொகையானது எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் பாரமரிக்கப்பட்டுவரும் சிறுவர் இல்லங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

தகவல்: முகாமைத்துவம்
எகெட் கரித்தாஸ்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை இரக்கத்தின் மறைக் கல்வி

## அருள்பணி.ஆ.செபஸ்தியான்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "நம்பிக்கையாளர்களின் சான்று மேலும் உறுதியானதாகவும் மிகவும் திறனுடையதாகவும் மாற்றம் தரும் காலமாகவும் திருச்சபைக்கு சிறப்பான ஒரு சவாலாகவும் இறையிரக்கத்தின் யூபிலி ஆண்டு இருக்கும்" என்று இறையிரக்க யூபிலி ஆண்டை அறிவிக்கும் பொழுது எடுத்துரைக்கிறார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நம் ஆண்டவர் இயேசு காணாமல் போனதைத் தேடிக் கண்டு பிடிக்கும் அன்பு ஆயனாக இருப்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார். இந்த இறையிரக்க ஆண்டில் இத்தகைய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள நாம் அழைக்கப்படுகின்றோம்.அத்தகைய இறையிரக்கத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது? அதை எவ்வாறு பிறருக்குக் கற்றுக் கொடுப்பது? என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார். எனவே இந்த இறையிரக்க ஆண்டில் இறையிரக்கத்தைப் பற்றிய விளக்கத்தையும் அதன் பல்வேறு பரிமாணங்களையும் இவண் காண்போம்.

### 1. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் இறையிரக்கமும்

உலகத்தின் மிகச் சிறப்பான தலைவர்களில் ஒருவராக திருத்தந்தை பிரான்சிஸ் இருக்கிறார்.இதற்குக் காரணம் ஏழைகளிடம் அவர் காட்டும் கருணையும் எளியவர்களின் ஏற்றத்திற்காகக் கொண்டுள்ள ஈடுபாடும் உலக அளவில் அவருக்கு ஒரு தனித்தன்மையான முத்திரையைப் பதித்துள்ளது. இறையிரக்கம் அவரது வாழ்வின் அனுபவமாக் இருக்கின்றது என்பதைப் பார்க்கின்றோம்.அதாவது சிறைச் சாலைகளில் கைதிகளின் பாதங்களைக் கழுவுவதிலும் மாற்றுத்திறனாளிகளையும் நோயுற்றோரையும் அரவணைப்பதிலும் துன்பத்தில் உழல்வோரைத் தமது கைபேசியின் வழியாக அழைத்துப் பேசுவதிலும் அவர் இரக்கத்தை அனுபவமாகத தருகிறார். விவிலியத்தில் காணப்படும் தந்தையைப் போன்று தாம் இரக்கமுள்ளவராய் இருக்கிறார். என்பதை எண்பிக்கிறார். இயேசு கிறிஸ்து இறைதந்தையினுடைய இரக்கத்தின் முகமாக இருக்கும். இயேசுவின் போதனைகளிலும் செபங்களிலும் இறையிரக்கத்தை அனுபவித்து அதை அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள்ள அழைப்பு விடுக்கிறார்.

### 2. விவிலியத்தில் இறையிரக்கம்

இறைவனின் பேரிரக்கத்தை இஸ்ரேயல் மக்கள் மீட்பின் வரலாற்றில் அனுபவித்ததையும் எவ்வாறு இயேசு கிஸ்துவில் அது வாழ்க்கை அனுபவமாக ஒளிர்ந்தது என்பதையும் திருவிவிலியம் விளக்குகிறது.

- விவிலியத்தில் "இறையிரக்கம்"என்ற சொல் 246 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- "இரக்கங்கள்"என்ற சொல் 41இடங்களிலும்
- "இரக்கமுள்ள" என்ற சொல் 53 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பெரும்பாலான பயன்பாடுகள் இறைவனின் இரக்கத்தைச் சுட்டிக் காட்டுவனவாகவே உள்ளன.
- எல்லோருக்கும் இறையிரக்கம் : இறையிரக்ககம் பாவிகளையும் மன்னிக்கக் கூடியது என்பதை பாவப்பட்ட பெண் மன்னிக்கப் படுவதிலிருந்து உணர்கிறோம் (லூக்7:36-50)
- இறையிரக்கத்தின் பார்வை: மரிய மதலேனாவை உற்றுப் பார்த்த உயிர்த்த ஆண்டவரின் பார்வை இரக்கத்தின் பார்வை. அப்பார்வை இன்று நம்மையும் உற்றுப்பார்த்து அவரைப் பின்பற்ற அழைக்கிறது (யோவா23:11-16)
- இறையிரக்கத்தால் தூய்மைப்படுத்தப்படுதல்: யோவான் எருசலேம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தும் இயேசுவின் செயல் இரக்கத்தின் செயலாகும் அந்த இயேசு ஆண்டவர் தம் கருணையாலும் அன்பாலும் இரக்கத்தாலும் நம்மையும் தூய்மைப்படுத்துகிறார்(2:13-25)

  இரக்கத்தின் காயங்கள்: மேலமாடி அறை அனுபவம் புனித தோமாவுக்கு இறையிரக்கத்தின் மறைபொருளை விளக்கியது. நமக்கோ நம் சந்தேகங்களை நீக்கி நம்பிக்கையில் நம்மை உறுதிப் படுத்துகிறது (யோவா20:19-31).
- இறையிரக்கமும் கருணையும்: இயேசு தொழு நோயாளர்மீது கருணை கொண்டு அவரைத்தொட்டு நலமாக்கிய இறையிரக்கம் நம்மையும் தொலைவிற்கல்ல மிகவும் அருகில் இருந்து தொட்டு நலமாக்குகிறது (மாறகு1:40-45).
- இறையிரக்கத்திற்கு எதிரான முன்சார்பு எண்ணம்: சமாரியப்பெண் மீது எவ்வித முன்சார்பு எண்ணமும் இல்லாமல் அவரை மதித்து ஏற்றுக் கொண்டு கலந்துரையாடி நம்பிக்கை வாழ்வில் உறுதி செய்தது இறையிரக்கத்தின் மிகப் பெரிய செயலாகும் (யோவா4:5-42).
- இறையிரக்கமும் பொறுமையும்: இறையிரக்கத்தின் மிக அழகான நிலை பொறுமை என்பதை கோதுமையும்களையும் உவமை சுட்டிக்காட்டுகிறது. நம் கடவுள் பொறுமை மிகுந்த அன்பான தந்தை: நமக்காகக் காத்திருக்கும் இரக்கத்தின் தெய்வம். நாம் அவரிடம் செல்லும்போதெல்லாம் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்பவர்(மத13:24-30:36-43).
- இறையிரக்கமும் புதுவாழ்வும்: இறந்த இலாசரை உயிர்த்தெழச் செய்தது இறையயிரக்கத்தின் உச்சகட்டம். இன்று இயேசுவின் இரக்கம் நமது கல்லான இதயத்தை எடுத்துவிட்டு கனிவுள்ள இதயத்தால் நிரப்புகிறது (யோவா11:1-45).

### 3. இரக்கமும் அன்பும்

தந்தையைப்போல் இரக்கமுள்ளவர்களாய் (லூக்:6:36)என்பது தான் இறை இரக்கத்தின் ஆண்டின் விருதுவாக்கு. கடவுளின் இரக்கத்தைப் பற்றிக் கூறும்போது கடவுளின் இரக்கம் அவரது வலுவின்மையின் அடையாளமாய் இருப்பதைவிட அவரது பேராற்றலைக் குறிப்பதாய் உள்ளது என்கிறார் புனித தோமா அக்குவினா. இதைத்தான் திருப்பாடல் ஆசிரியர். என்றும் உள்ளதுஅவரது பேரன்பு (திபா136) என்கிறார். இவ்வாறு இரக்கமும் பேரன்புமே இறைவனுடைய அடையாளங்களாய் உள்ளன.

### 4. இரக்கமும் செயல்பாடும்

இரக்கம் என்பது தந்தையின் செயல்பாடு மட்டுமன்று. அவருடைய உண்மைப் பிள்ளைகளை அடையாளப்படுத்தும் அளவுகோலாகவும் உள்ளது. இன்றைய உலக வாழ்வில் இரக்கம் காட்டுவதையும் வாழவதையும் நாம் தவற விட்டோம். எனவே யூபிலி ஆண்டில் நாம் செய்யயேண்டிய இரக்கச் செயல்கள் பற்றி சிந்திக்க வேண்டும் .அதுவும் ஆன்மீக மற்றும் உடல் சார்ந்த இரக்கச்செயல்கள் பற்றி நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். இரக்கச் செயல்கள் சிறியனவாக இருந்தாலும் முகமலர்ச்சியுடன் செய்யவேண்டும் என்கிறார் திருத்தநதை பிரான்சிஸ். அதே வேளையில் மானுடவாழ்வில் பணத்தை மையப்படுத்தி வாழும் வாழ்வைத் தவிர்க்க வேண்டும் என்கிறார்

### 5. இரக்கமும் நீதியும்

இரக்கமும் நீதியும் முரண்பட்டவை அல்ல. அவை ஓர் உண்மையின் இரு பரிமாணங்களே. நீதித் தீர்ப்பு என்பது மனமாற்றத்தின் தொடக்கமே. கடவுள் நீதியுடன் மட்டும் தம்மை நிறுத்திக் கொள்வதில்லை அவர் தம் இரக்கத்தாலும் மன்னிப்பாலும் நீதியைக் கடந்து செல்கிறார். இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்கள் மேல் காட்டப்பட்ட உயர்வான வெளிப்பாடு கடவுளின் இரக்கம் எந்த அளவுக்குச் செல்லும் என்பதைக் காட்டுவதாய் உள்ளது. எனவே கடவுள் வழங்கும் இரக்கத்தை நாம் அன்றாடம் வாழ்வதன் மூலம் கடவுள் நமக்கு வியப்பூட்ட நம்மை நாம் அனுமதிப்போம்.

### 6. இரக்கம் என்றால்

இரக்கம் என்றால் பிற உயிர்களின் துன்பம் கண்டு மனம் இளகுதல் இரங்குதல் வருந்துதல் பரிவு கொள்ளல் ஆகும்.

இரக்கம் என்பது வெறும் உணர்வு அன்று அன்பு செய்யும்
இறைவனின் முகம்.
இரக்கம் என்பது கடவுள் மனிதரால் சந்திப்பது.
இரக்கம் அன்பு சாந்தம் அமைதி இவற்றின் ஊற்று.
இரக்கம் இறைவனையும் மனிதரையும் இணைக்கும் பாலம்.

### 7. இரக்கத்தின் தந்தை

இறைவனின் இரக்கம் வெறும் கருத்து அல்ல: மாறாக ஒரு தாயும் தந்தையும் இதயத்தின் ஆழத்தில் தங்களின் பிள்ளைகளுக்காக உருகுவது போன்று உண்மையான தாகும். எகிப்து நாட்டில் இஸ்ரயேல் மக்கள் பட்ட கொடிய துன்பங்களைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்த கடவுள் பிடிவாதம் கொண்ட அவர்களைக் கைவிட்டு விடாமல் இரக்கம் நிறைந்த தந்தையாகவும் தம்மை வெளிப்படுத்தினார் "ஆண்டவர் பரிவும் இரக்கமும் உள்ள இறைவன்: சினம் கொள்ளத் தயங்குபவர் பேரன்பு மிக்கவர்: நம்பிக்கைக்கு உரியவர் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர் கொடுமையை யும் குற்றத்தையும் மன்னிப்பவர் (விப34:6-7) (திபா86:15:136:மீக் 7:18-20:நெகே 9:17-19:லூக6:36:எபே 2:4)இவ்வாறு கடவுள் தம் ஆற்றலை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமது இரக்கத்திலும் வெளிப்படுத்தினார்.

### 8. இரக்கத்தின் முகம்

உருவமற்ற இறைவனின் இரக்கத்திற்கு உருக்கொடுத்தவர் உயிரும் கொடுத்தவர் நம் அண்டவர் இயேசுகிறிஸ்து. அவர் தம் சொல்லிலும் செயலிலும் வாழ்விலும் பணியிலும் முழு ஆளுமையிலும் இறைத் தந்தையின் பேரிரக்கத்தை வெளிப்படுத்தினார்

- உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள் (லூ6:36)
- நான் உனக்கு இரக்கம் காட்டியது போல நீயும் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டாமா? (மத்18:32).
- இரக்கம் உடையோர் பேறுபெற்றோர். ஏனனில் இவர்கள் இரக்கம் பெறுவர்(மத்5:7).
- லூக் 15அதிகாரம் இரக்கத்தின் நற்செய்தி.

இதயத்தை அன்பினால் நிரப்பி மன்னிப்பின் வழியாக ஆறுதலைத் தந்து எல்லாவற்றையும் மேற்கொள்ளும் ஆற்றலாக இரக்கம் சுட்டிகாட்டப்படுகிறது.(திருத்தந்தை பிரான்சிஸ்)

### 9. இரக்கத்தின் திரு அவை

இறைவனின் இரக்கத்தை திரு அவை எந்த அளவுக்கு வெளிப்படுத்தி வாழ்ந்து காட்டுகிறதோ அந்த அளவுக்குதான் அதன் நம்பகத்தன்மை வெளிப்படும்.திரு அவை என்பது இரக்கத்தை கொடையாகப் பெற்றுக் கொள்ளும் இடமாக விளங்கவேண்டும். எல்லோரும் ஏற்றுக்கொள்ளப்பெற்று. அன்பு செய்யப்பெற்று மன்னிக்கப் பெற்று நற்செய்திக்கு ஏற்ற நல்வாழ்வு வாழ விளக்கம் வகுக்கப் பெறும் இடமாகத் திகழ வேண்டும். (திருத்தந்தை பிரான்சிஸ்)

நாம் அன்னை மரியாவை "இரக்கத்தின் அன்னை" என்று அழைக்கின்றோம். நம்மைப் போன்று மானிட வாழ்வைப் பகிர்ந்து கொண்ட அன்னை மரியா இறைவனின் திட்டத்திற்குத் தன்னை முழுமையாகத் தந்து தமது அன்பாலும் இரக்கத்தாலும் நம்மை அரவணைக்கிறார். இரக்கமே மனுவுறுவான இயேசுவின் தாய் மரியா என்பதால் அவரை இரக்கத்தின் அன்னை என அழைப்பு பொருத்தமானதே. நம் அன்னையைப் பின்பற்றி இரக்கத்தோடு வாழ அக்கறை கொண்டவர்களாய் தீர்ப்பிடாதவர்களாய் பிறரைப் பற்றி புரணி பேசாதவர்களாய்.பழிக்குபழிவாங்க நினைக்காதவர்களாய் இரக்கத்தைப் பிறருக்கு காட்ட மறுக்காதவர்களாய் சிறுசிறு இரக்கச்செயல்கள் செய்வதில் ஆர்வம் உள்ளவர்களாய் பிறர் காட்டும் இரக்கத்தை ஏற்றுக்கொள்பவர்களாய் தினமும் இரக்கத்திற்காக செபிப்பவர்களாய் வாழ்வோம்! இறை இரக்கத்திற்குச் சாட்சியம் பகர்வோ

இறக்கத்தான பிறந்தோம்
இருக்கும்வரை இரக்கத்தோடு வாழ்வோம்!.
தூய அன்னை தெரேசா

1ம் பக்கத் தொடர்ச்சி..........

## ஆயரின் செய்தி....

25ம் திகதி தேசிய மறைக்கல்வி தினம். திருச்சபையில் மறைக்கல்விப் பணி மிகவும் முக்கியமான பணியாகும். பிள்ளைகளை விவிலிய அறிவிலும் விசுவாச வாழ்விலும் வளர உதவுகிறது மறைக்கல்வி. இதற்கு எல்லா பங்கு மட்டங்களிலும் அர்ப்பணத்தோடு பணியாற்றுகின்ற மறையாசிரியர்களை நாம் வாழ்த்தி பெரிதும் பாராட்டுகின்றோம். ஒருபங்கின் முதல் மறையாசிரியர் பங்குத்தந்தை. இவ்வாறு குரு, துறவறசகோதர சகோதரிகள் மறையாசிரியரோடு இப்பணி நின்றுவிடுவதில்லை. திருத்தந்தை 12ம் பத்திநாதர் சொல்வார், 'ஒரு குழந்தையின் முதல் கல்விக்கூடம் தாயின் மடிமுதல் மறையாசிரியர் பெற்றோர்'. பெற்றோரிடமிருந்தே குழந்தை அன்பையும் விசுவாசத்தையும் முதலில் கற்றுக் கொள்கிறது. வீட்டில் மறைக்கல்வி வகுப்பு நடை பெறுவதில்லை. மாறாக பெற்றோர் தமது அன்பு, நம்பிக்கை செபவாழ்வின் மூலமாக தமது பிள்ளைகளுக்கு மறைவாழ்விற்காக தளத்தை இடுகின்றார்கள். எமது மறைமாவட்டத்தில் எல்லா நிலைகளிலும் மறைக்கல்விப்பணி சிறப்பாகவளர இணைந்து,அர்ப்பணத்துடன் செயல்படுவோம்.

29ம் திகதிஅதிதூதர்களானதூயமிக்கேல், கபிரியேல், இரபேல் விழா. விவிலியத்தில் தூயசம்மனசுகளின் செயல்பாடுகளைநாம் வாசித்தாலும் இவர்கள் மூவரின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் எம்மைக் காப்பவர்களாக, இறைவனின் செய்தியைக் கொண்டு வருபவர்களாக செயல்படுகின்றார்கள். இவர்களை மேலும் அறிந்து கொள்ளவரும் வருடங்களில் பல முயற்சிகளை நாம் மேற்கொள்கிறோம்.

விசுவாசப் பயணம் என்பது இலகுவானதொன்றல்ல. சவால்கள் பல நிறைந்தது. அனைத்தையும் நாம் எதிர்கொண்டு இறையன்பை வாழ்ந்துகாட்டவும் இறைவனின் இரக்கத்தை செயல்படுத்தவும் முன்வருவோம். ஒரே மறைமாவட்டமாக கைகோர்த்து செயல்படுவோம். எமது இலக்கைத் தெளிவாக்கி திட்டங்கள் பலவகுத்துதுடிப்போடு செயல்படுத்தி அனைவருக்கும் முன்னோடிகளாக வாழ்ந்துகாட்டுவோம்.

**இறைவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.**

இறையன்பில்,
பேரருட்திருகிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலைமறை மாவட்ட ஆயர்



## மறைக்கல்விச் சிந்தனைகள்

"விசுவாச வளர்ச்சியும் கிறீஸ்தவ வாழவின் முதிர்ச்சியையும் பேணி வளர்ப்பதே மறைக்கல்வியின் பணி"

(ஆயர்பேரவை 1978)

## குட்டிக்கதை ஒன்று.

FR.Nc.........

ஒரு வீட்டிலே விருந்துபசாரம் நடக்கின்றது. அந்த வீட்டிலே இருந்த ஒருவர் இறந்து எட்டாம் நாள் தினமாகும். வீட்டைப் பொறுத்தவரை வசதியானவர்கள். விருந்திலே எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆட்டிறச்சி சமைத்திருந்தார்கள். திடீரென்று பக்கத்து வீட்டிலே இருந்த ஒருவர் இந்த வீட்டிற்கு வந்து சமையல் பாகத்திற்குச் சென்று ஒரு ஆட்டின் தலையை தூக்கி கொண்டு வந்தார்.

எல்லோருடைய கண்களும் அவரை நோக்கின "ஒருநல்ல காரியம் செய்யிறதுக்கு கள வெடுத்தா சாப்பாடு குடுக்கவேணும். என்ர ஒரே ஒரு ஆடு ஆயும் கொண்டு போட்டிங்களே"

நல்ல காரியத்திற்கு திருடியதை நினைத்து வீட்டு உரிமையாளர் வேதனைப்படுகிறார். இனி வேதனைப்பட்டு என்ன பயன் அனைவரையும் வெட்கித்தலை குனிய வைத்து விட்டது உண்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைக்கல்வி ஆசிரியை மரியா

**முன்னுரை:**
அன்னை மரியா ஆண்டவர் இயேசுவின் தாயாகவும் நமஃத தாயாகவும் விளங்குகிறார். இவர் தொடக்கத்திலிருந்தே இயேசுவின் மறைபொருளை அறிவிக்கம் மறைக்கல்வி ஆசிரியையாகத் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது. இறைத்திட்டத்தைத் தமது வாழ்விலே நிறைவேற்றி அனைத்து அசிரியர்களுக்கும் முன் மாதிரியாகத் திகழ்கிறார். மறைக்கல்வி ஆசிரியர் மாணவர்களுக்கத் தாயாக விளங்க வேண்டும் என்று எடுத்துரைக்கின்றார். மாணவருக்கும் இறைவனுக்கும் இடையே பாலமாக மாறி இறை வல்லமையில் நம்பிக்கைக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். செபத்தில் நிலைத்திருந்து ஆசிரியப் பெருமக்கள் மாணவர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுக்கும் பங்காளிகளாக மாறவேண்டும். திருத்துாதர்களுக்கு மறைக்கல்வி கற்றுகொடுத்த மரியா எவ்வாறு சொல்லாலும் செயலாலும் முன்மாதிரியாக விளங்கினாரோ அது போன்று மறைக்கல்வி ஆசிரியரும் சாட்சியான வாழ்க்கை வாழவேண்டுமென்று எடுத்துரைக்கிறார்.

**இறைத்திட்டம்**
"அவர் தமது திருவுளத்தின் மறைபொருளை நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.இது கிறிஸ்து வழியாகக் கடவுள் விரும்பிச் செய்த செயலாகும். கால நிறைவில் விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற திட்டமே அம்மறைபொருள்" (எபே1:9-10). இறைவன் தீட்டிய இத்திட்டம் நிறைவேற முதற்படியாக அமைந்தது மீட்பரை அனுப்புவதான அவரது வாக்குறுதி. தொடக்க நூலில் நாம் காணும் பெண்ணின் வித்துக்கும் அலகையின் வித்துக்குமிடையேயான பகைமையும் வாக்களிக்கப்பட்டவரின் பணியாக மீட்பினையும் நிலைப்படுத்த வந்தவர் தான் மெசியாவாகிய இயேசு கிறிஸ்து (தொ.நூா.3:15)."அருள் இழந்த மனிதன் தன் திருமுன் துாயவனகாவும் மாசற்றவனாகவம் விளங்கும் படி உலகம் தோன்றும் முன்பே கடவுள் கிறிஸ்து வழியாக நம்மைத் தேர்ந்தெடுத்தார்" (எபே1:4) கிறிஸ்துவும் இரத்தம் சிந்தி நிறைவேற்றி நமக்கு மீட்பளித்துள்ளார்.விண்ணரசை இம்மண்ணகத்தில் அதாங்கி வைத்தார் இவ்வரசின் அடையாளம் தான் திருமறை. இவ்வாறு இறைத் திட்டத்தில் ஒன்றுகூடி இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு துாய ஆவியால் அழைக்கப்பட்டு விசுவாசத்தில் ஒன்றிணைக்கப் பட்ட மக்களைக் கொண்ட திருக்கூட்டமே திருச்சபை." திருச்சபையின் இலக்கணமும் இதுவே.

இத்திருச்சபையின் மக்கள் அனைவருமே நிறைவாழ்வுக்கு அழைக்கப் பட்டவர்கள். எனவே தான் துாய பேதுரு "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர் அரச கூட்டத்தினர் துாய மக்களினத்தார்.கடவுளின் உரிமைச்சொத்தான மக்கள்" (1பேதுரு2:9) என்கிறார். இப்புதிய இறைமக்கள் அல்லது திருச்சபை கிறிஸ்துவையே தன் தலைவராகக் கொண்டுள்ளது. இதில் துாய ஆவியானவர் குடிகொண்டுள்ளார். இத் திருச்சபையில் மூவொரு இறைவன் பெயரால் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் அடங்குவர். திருப்பணியாளர்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவருமே திருச்சபையின் உறுப்பினரே.

**மரியா திருச்சபையின் தாய்**
திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல் கிறிஸ்து இம்மறையுடலின் தலையாக இருக்கின்றார். இவரோடிணைந்தாலே திருச்சபை நிறைவுபெறுகின்றது.மரியா இயேசுவின் தாய் தலையாகிய கிறிஸ்துவின் தாய் தலையாம் கிறிஸ்துவின் தாய் என்றால் தாயோடிணைந்த உடலாம் திருச்சபைக்கு தாய்தானே? கிறிஸ்துவை மரியா உடலால் மட்டுமல்ல உள்ளத்தாலும் பெற்றெடுத்தார். எனவே தான் 2-ஆம் வத்திக்கான் சங்கம் முடிந்தபின் திருத்தந்தை 6-ஆம் பவுல் "மரியா திருச்சபையின் தாய்" என்று அறிவித்தார் எனவே நம் அன்னை மரியா திருச்சபையின் அன்னை திருச்சபையானது திருமுழுக்காலும் தமது போதனைகளாலும் புதிய நிலைவாழ்விற்கு நம்மைப் பெற்றெடுக்கின்றது.அன்னை மரியா துாய ஆவியால் நம்மை இறைமக்களாகப் பெற்றெடுத்து வளர்க்கத் திருச்சபையோடு ஒத்துழைக்கின்றார். திருச்சபையின் அன்னை மரியா தன் வாழ்நாள் முழுவதும் மறைக்கல்வி ஆசிரியையாக விளங்கினார். அவரைப் பின்தொடர்ந்து நாமும் எவ்வாறு மறைக்கல்விப் பணிபுரிய முடியுமென்று காண்போம்.

**மரியா இணைப்பின் பாலம்**
இயேசு மரித்த பின் சீடர்கள் சிதறுண்டு போயினர்.பின்னர் ஒன்றுகூடினர்.இயேசு விண்ணகம் சென்றபின் "நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம்" (தி.ப.1:4) என்ற அவர்ன் வார்த்தையை நம்பி விண்ணிலிருந்து வரும் வல்லமையை துாய ஆவியைப் பெற்றுக்கொள்ள ஒருங்கிணைந்து செபிக்கின்றனர்.மரியா சீடர்களை ஒன்றுதிரட்டி இயேசு வருவார் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறார். இவ்வாறு சீடர்களைச் சிதறுண்டுபோகாது ஒன்றிணைத்து விசுவாசத்தில் உறுதிப்படுத்தி செபத்தில் நிலைக்கவைத்து. உன்னத ஆவியைப் பெற்றுக்கொள்ளச் செய்தவர் மரியா. "சீடர்கள் சிலர் பெண்களோடும் இயேசுவின் சகோதரர்களோடும் அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்" (தி.ப.1:14).அன்றுதான் திருச்சபை தோன்றியது.

துாய ஆவியானவர் என்றும் நம்மோடு குடியிருக்க எழுந்தருளிய அவ்வேளையில் அவரை வரவேற்க சீடர்களுடன் உறவில் இணைந்திருந்தவர் மரியா. இத்திருச்சபையின் தொடக்கத்திற்குக் காரணமாக இருந்தவர் மரியா. திருச்சபையின் வளர்ப்புக்கும் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தவரும் மரியாவே. திருச்சபையின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை அதன் மகிமையுள்ள அணிகலனாகத் திகழ்பவர் திருச்சபையின் வாழ்வோடு தம்மை இணைத்துக்கொண்ட மரியாவைப் போல ஒருமனப்பட்டு இணைந்து வாழ சீடர்களை அழைத்த மரியாவைப்போல திருச்சபையும் இன்று நம்மைத் தம்மோடு இணைந்து ஒன்றுபட்டு வாழ்ந்திட அழைக்கின்றது. இன்று உலகில் நிலவும் சாதி இன மொழி வேறுபாடுகளைக் களைந்து **இறைவனின் சொந்தப்பிள்ளைகள் மரியாவின் அன்பு மக்கள் கிறிஸ்துவின் சகோதரர் சகோதரிகள் எனும் உணர்வுடன் வாழ்ந்திட மரியா நம்மைத் தமது முன்மாதிரிகையினால் அழைக்கிறார்.** மறைக்கல்வி கற்பிப்பவரும் வேற்றுமைகளைக் களைந்து திருச்சபைக்குப் பிரமாணிக்கமுள்ளவர்களாக வாழவேண்டும்.

**இறைவல்லமையில் நம்பிக்கை**
இயேசுவுடம் மூன்றாண்டுகள் உடனிருந்து அவரது போதனைகளைக் கேட்டும் அவரது வல்ல செயல்களைக் கண்டிருந்தும் அவரால் வழிநடத்தப் பட்டும் வந்த சீடர்கள் அவரது உயிர்ப்பில் ஆழ்ந்த நம்பிக்கையை அற்றவர்களாய் இருந்தனர். ஆனால் மரியா இயேசுவின் உயிர்பில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். சீடர்களுக்கு இந்த நம்பிக்கையை ஊட்டினார். இறைவனின் ஆற்றலிலும் வல்லமையிலும் முழு நம்பிக்கை வைத்துத் தம்மை முழுவதுமாகக் கையளித்து வாழந்த மரியாவைப்போல திருச்சபையும் கிறிஸ்துவின் உயிர்ப்பில் மலர்ந்து நிற்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பு இல்லையேல் கிறிஸ்துவ மறையே இல்லை. எனவே திருச்சபையின் உறுப்பினராகிய நாமும் அவரது உயிர்ப்பில் நம்பிக்கையை வைத்து வாழ்ந்திட மரியா ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுகின்றார். உயிர்த்து இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் கிறிஸ்துவுக்குச் சான்று பகர திருமுழுக்குப் பெற்றவரெல்லாருமே அழைக்கப்பட்டவர்கள். அவரது உயிர்பில் நம்பிக்கை வைத்து வாழும்போது இவ்வுலக வாழ்வு வரவிருக்கும் வாழ்வுக்கு முன்சுவை என்பதையுணர்ந்து வாழ்ந்து இயேசுவின் மீட்புச் செய்தியை உலகிற்கு அளிக்கும் அரிய கருவிகளாகச் செயல்படுவோம். மறைக்கல்வியின் கருப்பொருள் கிறிஸ்துவின் உயிர்ப்பு ஆகும். இதற்குச் சாட்சியாக வாழ்வதே மறைக்கல்வி ஆசிரியரின் சிறப்பு ஆகும்.

## வாரம் ஒருவரம் கேட்போம்

**மகிழ்ச்சி**
- மகிழ்ச்சியாய் இரு. நேரம் உன்னுடையது.
- மகிழ்ச்சியோடு பிறரை வாழ்த்து. அவர்களைச் சிரிக்செய்.
- வருத்தத்தோடு இராதே. எப்பொழுதும் முக மலர்ச்சியோடு இரு.
- மகிழ்ச்சியான இதயத்தோடு கடவுளுக்கு வாழ்த்துப்பாடல்கள் பாடு.
- குழந்தைகளோடு விளையாடு. அவர்களோடு இருப்பதில் மகிழ்ச்சி கொள்.
- நல்ல நண்பர்களோடு சிரித்து மகிழ்.
- நற்செயலை மகிழ்ச்சியோடு பாராட்டு.

**குடியுரிமை**
- இலங்கையனாக இருப்பதில் பெருமைப்படு.
- உன் வார்த்தையிலும் செயலிலும் நீஒர இலங்கையன் என்பதை நிரூபி.
- நமது தேசியகீதத்திற்கும் கொடிக்கும் மரியாதை செய்.
- வேற்றுமைகளை மறந்து பிற இன மக்களோடு உறவை வளர்த்துக்கொள்.
- சமய ஒற்றுமையை வளர்த்துக்கொள்.
- பொது உடமைக்குப் பாதுகாப்புக்கொடு. இந்நல் எண்ணம் பிறரில் வளரஉதவிடு.
- உன் சிறிய செயலும் நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாக அமையட்டும்.

**நேர்மை**
- நீ செய்யும் ஒவ்வொரு செயலையும் முழு மனதோடு செய்.
- உன்னுடைய ஒவ்வொரு செயலையும் உண்மை உள்ளவனாய் இரு.
- குடும்பத்திலும் அலுவலகத்திலும் பொறுப்புள்ளவனாய் வாழ்.
- உனது நேர்மையான வாழ்வைக் கண்டு சமுதாயம் உன்னைப் பாராட்டும்படிவாழ்.
- உண்மையை வெளிப்படுத்தும் செயல்களில் ஈடுபடு.
- உண்மைக்காக உழைத்து உன் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கு.
- உண்மை உள்ளவனாக வாழ்ந்து பிறரின் நேரியவாழ்வைப் பின்பற்று.

**நல்ல நட்பு**
- மதிப்பீடுகளை மதித்து வாழும் மக்களிடையே வாழ்.
- ஒற்றுமையை வளர்ப்பதில் கவனமாய் இரு.
- அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் மக்களைத் தவிர்த்து அமைதியைக் காப்பவரோடு நட்புகொள்.
- பொதுநலனை விரும்பும் நண்பர்களை ஒன்றிணைத்து நட்புக் குழுக்களை ஏற்படுத்து.
- முற்போக்கு மனநிலை கொண்ட மக்களோடு தொடர்புகொள்.
- ஆன் மீகச் செயல்களில் துரிதமாகஈடுபடும் மக்களிடம் உன் நேரத்தைச் செலவழி.
- உன் அருகில் வசிப்பவர்களில் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்து உறவை வளர்த்துக்கொள்.

அருட்பணி. ஆஞ்சலோபொன்னையா, ஜே.ச.
நன்றி: பீட்டர் தும்மா

## மண் வாசனை

Fr.N.C.அருள்வரதன்

- தடம் பதித்த மண்ணை
(கா) கரைவார்த்து விட்டுவிட்டு
இடம்பெயர்ந்து எங்கெங்கோ
புலம் பெயர்ந்து போனவர்கள்
பட்ட அடிகளை
இனிப்படவும் முடியாமலே
கண்காணமுடியாத
காட்சிகளைக் கண்டுவிட்டு
படகேறிப் பல இடமும்
நிலை மாறிப் போனவர்கள்.

- வாழ்ந்த வீடுகள்
வளர்ந்த இடங்கள்
இருந்த உறவுகள்
எல்லாமே மறைந்துபோக
எங்கோ புதிய இடம்
எப்படியோ வாழ்வு அங்கு
என்னதான் புது வாழ்வு
எப்படித்தான் என்றாலும்
நம்மண்ணில் நாம் கண்ட
நன்மைகள் போல் தெரியாதே

- வாழ்ந்த வீட்டிலே
வறுமைகள் இருந்தாலும்
வறுமையிலு மங்கே
வளங்களைக் கண்டவர்கள்
அண்டை வீட்டிலே
சண்டையோ பிளவோ
என்னவென்றாலும்
உறவுகள் அங்கே
உடையாமல் நின்றதே.

- என்னதான் துன்பங்கள்
எப்படியே வந்தாலும்
பிறந்த மண்ணின்
நறுமணத்தை எவருமே
பிறிதெங்கும்
காணவே மாட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய காலத்தில் பெற்றோரின் கடமைகள் மிகப் பொறுப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இன்று உலகம் போகின்ற போக்கை நாமே எம் கண்களால் காணமுடிகின்றது.யாரும் எமக்குச் சொல்லித்தரத் தேவையில்லை.இருந்தும் நாம் கண்கள் இல்லாத குருடர்களாய் வாழ்கின்றோம்.அப்படி நடப்பதால் கடவுள் தந்த பொக்கிஷமான எம் பிள்ளைகளை அவதானித்த போது பிள்ளைகளிடம் உண்மை இல்லை. அன்பு இல்லை தேவபயம் இல்லை இரக்க சுபாவம் இல்லை மன்னிக்கும் மனப்பாங்கு இல்லை ஒரு நல்ல முடிவு எடுக்கும் திறன் இல்லை எல்லாமே இல்லை இல்லை இல்லை இப்படியான நிலை நீடிக்குமானால் எமது எதிர் கால சந்ததியினர் எதனைச் சாதிக்கப் போகிறார்கள். எதனை இச் சமூகத்திற்கு கொடுக்கப் போகிறீர்கள் இந்நிலை மாற வேண்டுமானால் முதலில் எம் ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெற்றோரும் விழிப்பாக இருந்து நல்ல வழிகாட்டியாக இருக்க கடமைப் பட்டுள்ளோம்.

நீதிமொழி22:6 சொல்கின்றது "நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு.முதுமையிலும்அவர் அந்தப் பழக்கத்தை விட்டு விட மாட்டார்".இதன் படி

1. நீங்கள் சொல்வதை பிள்ளைகள் நம்பும் படி கற்றுக் கொடுக்க வேண்டும்.
2. கீழ்ப்படியும் வழக்கத்தை தமதாக்கிக்கொள்ள பயிற்சி கொடுக்க வேண்டும் அவதானிக்க வேண்டும்.
3. எப்போதும் உண்மை பேசும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் அவதானிக்க வேண்டும்.
4. அதிக செல்லம் கொடுக்காது பிழைகள் செய்யும் போது தண்டித்துத் திருத்தவும் சரியானவைகளைச் செய்யும் போது பாராட்டுதலும் கொடுக்க வேண்டும்
5. கடவுள் தம் பிள்ளைகளை எப்படி வழி நடத்துகிறார் என்பதை நேரம் கிடைக்கும் போதெல்லாம் அனுபவங்கள் வாயிலாக சொல்லிக் கொடுக்க வேண்டும்
6. பிள்ளைகளுக்கு "பாவங்கள்" பற்றி தெளிவாக விளக்கத்துடன் பாவத்தின் விளைவுகள் பற்றியும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.
7. "என் வாக்கு உன் பாதைக்கு விளக்கு" என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப எமக்கு விளக்காக இருக்கும் திருவிவிலியத்தை வாசிக்கவும் வாசித்த விடயத்தை தியாணிக்கவும் பயிற்சி கொடுக்க வேண்டும்.அவதானிக்க வேண்டும்.
8. ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் உள்ள பொறுப்புக்கள் கடமைகள் உண்டு என்பதை அடிக்கடி நினைவுபடுத்தவேண்டும்
9. பெற்றோராகிய நீங்கள் உங்கள் முன்மாதிரிகையான சொல் பேச்சு நடத்தை செயல்பாடுகள் அனைத்தும் பிள்ளைகள் தம் வாழ்வில் பின்பற்றக்கூடியதாக அமைய வேண்டும்.
10. பெற்றோராகிய நீங்கள் வழிநடத்தப் போகும் இவ் விடயங்கள் முயற்சிகள் யாவையும் இறைவன் பாதம் வைத்த செபம் செய்யவும் கடமைப் பட்டுள்ளீர்கள்.

திருமதி-ச.சிறில்பத்திநாதன்.

## பங்குகளின் சுதேச குருக்கள் தின நன்கொடை விபரம் 31.07. 2016.

| இல | பங்கு | தொகை |
|---|---|---|
| 1. | தூய லூர்து அன்னை | 39 453.00 |
| 2. | தூய மரியாள் பேராலயம் | 34 910.00 |
| 3. | இறை இரக்கம் அலஸ்தோட்டம் | 14 270.00 |
| 4. | தூய குவாடலூப்பே சின்னக்கடை | 10 780.00 |
| 5. | குழந்தை இயேசு உவர்மலை | 9 500.00 |
| 6. | துய வனத்து அந்தோனியார் செல்வநாயகபுரம் | 9 306.00 |
| 7. | தூய திருமுழுக்கு யோவான் சாம்பல் தீவு | 7 400.00 |
| 8. | தூய சூசையப்பர் நிலாவெளி | 6 250.00 |
| 9. | திருஇருதய ஆண்டவர் இருதயபுரம் மூதூர் | 6 000.00 |
| 10. | தூய அந்தோனியார் மூதூர் | 3 000.00 |
| 11. | தூய சதாசகாய மாதா கந்தளாய் | 3 000.00 |
| 12. | தம்பலகாமம் | 2 500.00 |
| 13. | கிறிஸ்து அரசர் கன்னியா | 2 300.00 |
| 14. | தூய அந்தோனியார் சீனக்குடா | 1 500.00 |
| 15. | தூய செபமாலைமாதா குச்சவெளி | 1 000.00 |
| | **முழுத்தொகை** | **151 169.00** |

தகவல் : அருட்பணி D.அன்ரு ஸ்ரீபன்
நிதிப்பொறுப்பாளர், ஆயர் இல்லம்,
உவர்மலை, திருகோணமலை

## ஆழ்ந்த அனுதாபங்கள்

அருட்தந்தை அ.றொகாண் பேணாட் அடிகளாரின்
தந்தை அமரர் அருளானந்தம் எலாயஸ் அவர்களின்
மறைவையொட்டி அவர்களது குடும்பத்தினருக்கு

திருமலைத் தீபம்
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து நிற்கின்றது.

# நல்லொழுக்க விழுமியத்தின் பார்வையில் இரக்கம்

"தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்.(லூக்6:36) என்ற இறைவார்த்தையை அடிக்கடி சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம்.ஆனால் இவ்வார்த்தைகளின் அர்த்தங்களை அறிய முயல்கிறோமா? என்பது கேள்விக்குறியான விடயம்.தந்தையின் இரக்கத்தை நாம் உணர்ந்திருக்கிறோம் ஆனால் அதை மற்றவருடன் பகிர முனைந்திருக்கிறோமா? என சிந்திப்போம்.

இரக்கத்தை வெறுமனே உணர்வு எனும் எல்லைக்குள் அடக்கி விட முடியாது: மாறாக அது நீதியின் பார்வையில் நல்லொழுக்கமாகவும் நீதியின் தேவைகளை மாற்றியமைக்கும் ஊடகமாகவும் விழங்குகின்றது. ஒருவரை கட்டாயப்படுத்தி இரக்கத்தை பெறமுடியாது ஏனெனில் அது இலவசமாய் சுய விருப்பமுடன் கொடுக்கவேண்டிய ஓர் உயரிய பரிசு மேலைத்தேய உலகில் பல பாரம்பரியங்களுக்கிடையில் இரக்கம் எனும் சொல் பல கருப்பொருள்களை தாங்கி நின்றபோதிலும் கத்தோலிக்க மரபில் உளத்தூய்மையில் எழும் மன்னிப்பின் அடையாளம் எனும் கருப்பொருளில் நோக்கப்படுகின்றது.எனவே இன்றைய சூல்நிலையில் இரக்கத் த மதங்களுக்குள் அடக்கிவிடாமல் உணர்வுகள் எனும் கட்டுகோப்பில் முடக்கிவிடாமல் ஓர் சீரிய நல்லொழுக்க விழுமிய பார்வையில் நோக்கவேண்டும்.

நல்லொழுக்க விழுமியம் எனும் போது எமது நல்ல பழக்கவழக்கங்கள் என்ற எண்ணக்கருவினால் கூறமுடியும். ஒரு மனிதனை நல்லவர்களாக மாற்றும் எந்தவொரு பழக்கவழக்கமும் நல்லொழுக்க விழுமியமாகவே கருதமுடியும்.தீய பழக்கங்களுக்கு இடையில் நாம் தேர்ந்தெடுக்கும் ஓர் நல்ல பழக்கம் எம் வாழ்வின் இறுதி வரையும் எம்மோடு ஒன்றினைந்து வருகின்றது. மேலும் எமது கலந்துரையாடல் இரக்கத்தை நீதி என்ற பார்வையில் நோக்கும் போது நீதியை அரசியல் அல்லது சட்டம் என்று நோக்குவதில்லை மாறாக ஒருவருக்கு நாம் செய்யும் நியாயம் தருமம் என்ற பார்வையில் நோக்குவதாகும்.

### இரக்கம் - உணர்வு :

இரக்கம் ஏன் ஓர் உணவாக மாற்ற முடியாது எனும் வினா எம்பவரின் உள்ளங்களில் எழலாம்.இரக்கத்தில் உணர்வு இருக்கிறது ஆனால் உணர்வு மட்டும் இரக்கமாக மாறமுடியாது. காரணம் நல்லொழுக்க விழுமியம் எனும் பார்வையில் நீதி உண்மை எனும் உயரிய சமூக விழுமியங்கள் மறைந்துள்ளன.சிலருக்கு இக்கருத்தை புரிந்து கொள்ள முடியாது.காரணம் என்னவெனில் ஒருவர் மீது இரங்குகையில் உணர்வு முழுமையான இரக்கத்தை பெறுகிறது உண்மையை கருத்தில்கொள்வது கிடையாது உதாரணமாக: ஓர் நீதிபதி இரக்கம் என்ற பேரில் ஓர் குற்றவாளியை விடுவிக்க முடியாது.எனவே இரக்கம் உணர்வை முதலிடத்திலும் உண்மை நீதியை இரண்டாவது இடத்திலும் கொண்டுள்ளது.

### இரக்கம் - நீதி :

இரக்கம் மன்னிப்பை வெளிப்படுத்துவதென்றால் எம்பவரில் சிலர் நீதியின் பார்வையில் எம்மால் இரக்கத்தை நோக்க முடியுமா? எனும் சந்தேகம் எழக்கூடும். ஏனென்றால் யாராவது ஒருரவர் இரக்கம் செயல்கள் செய்யும் போது அவர் அநீதியான முறையில் செயற்படுவதாக பிறருக்கு தோன்றக்கூடும் புனித தோமஸ் அக்குவினாஸ் இதைபற்றி கூறுகையில் இரக்கம் நீதிக்கு முறனாக செல்வதில்லை ஆனால் நீதியின் நிமித்தமான ஓர் வித திருப்தியை அளிக்கிறது நீதியில்லா இரக்கமும் இரக்கமில்லா நீதியும் வாழ்க்கையில் பயனந்தது ஏனெனில் இவை இரண்டும் நடைமுறைப்படுத்தும் போது தான் நல்லொழுக்க விழுமியமாக இரக்கம் நீதி ஆகியவை மாறுகின்றன.நீதியின் உயரிய நோக்கம் பொது நன்மைக்கு இட்டுச்செல்வதே.கடவுள் படைப்புகளை படைக்கும் போது அவர் அனைத்தையும் நல்லதெனக் கண்டார் (காண்க:1-31) கடவுள் படைப்புகளின் தேவைக்கு ஏற்ப.அனைத்தையும் படைத்து அவற்றை நீதியாகக் கருதினார் (காண்க:மத்:6:25-34) இவை அனைத்துக்கும் காரணம் என்ன? அவரின் அன்பு இரக்கம் என பதிலகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.அவைகளில் எம் முக்கிய நோக்கம் இரக்கத்தை மையப்படுத்துவது.எனவே இறைவனின் இரக்கம் பாகுபாடு பாரத்து மனிதர்களுக்கு கொடுக்கப்பட்டது அல்ல.அனைவருக்கும் சமமானது நீதியானது. காரணம் அவரின் இரக்கம் மனிதகுலத்தினை பொதுநன்மைக்காக இட்டுச்செல்வது ஆகவே அவரின் இரக்கம் ஓர் அநீதியான மனிதனையும் நீதியான முறையில் மாற்றியமைக்கிறது பாவியையும் நேர்மையாளாராய் மாற்றியமைக்கிறது.இறைவனின் இரக்கம் நீதியின் முழுமையாகவும் பாவிகளின் மனமாற்றத்திற்கு வழிவகுப்பதாகவும் அமைகின்றது.

### இரக்கம் - அனுதாபம்

அனுதாபம் இரக்கம் இவை இரண்டும் ஒன்றா? அல்லது வெவ்வேறானதா?

புனித அகுஸ்தினார் இதைபற்றி கூறுகையில் இரக்கம் என்பது நாம் மற்றவரின் துயரில் அல்லது அவர்களின் வருத்ததில் மனமிரங்குவது இது எம்மால் முடியும் என்றால் உதவலாம் என்ற நினைப்பை தூண்டும் ஆனால் அனுதாபம் என்பது நாம் மற்றவரின் துயரத்தைக் கண்டு கவலைப்படுவது.அத்துயரம் எமக்கு வந்திருந்தால் எம் உணர்வு என்னவாக இருக்கும் என அனுதாபப்படுவது எனவே இரக்கம் அனுதாபம் இரண்டுக்கும் இடையில் சிறிய வேறுபாடு இருந்தபோதிலும் அனுதாபம் இரண்டுக்கும் இடையில் சிறிய வேறுபாடு இருந்தபோதிலும் அனுதாபம் இரக்கச் செயல்களை தூண்டும் ஓர் பண்பு ஆனால் நாம் காணும் அனைத்துக்கும் அனுதாபப்படுவது கிடையாது.காரணம் சந்தர்ப்பங்கள் எம் மனதில் ஓர் தாக்கத்தையோ அல்லது ஏக்கத்தையோ ஏற்படுத்துவதில்லை.உதாரணமாக நாம் எத்தனையோ பிச்சைக்காரர்களை பார்த்திருக்கிறோம் ஆனால் பார்க்கும் எல்லோருக்கும் உதவுவது இல்லை அனுதாபப்படுவதும் இல்லை எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் எம் மன நிலை என்ன? என்பதை சற்று சிந்தனை செய்து பார்க்கவேண்டும்.

இரக்கத்தை பற்றி புனித தோமஸ் அக்குயினாஸ் மேலும் கூறுகையில் ஓர் விவேகமுள்ள அறிவுத்திறனாக இரக்கம் அமையும் போது நியாயத்தை ஒதுக்கிவிடாமல் நாம் ஒருவரை மன்னிப்பதோ அல்லது உதவுவதோதான் இரக்கம் அவர் எடுத்தியம்புவது என்னவெனில் நல்லொழுக்க விழுமியம் ஓர் மனிதன் பிறப்பிலிருந்து பெற்றுகொண்ட ஓர் பண்பாக இருந்தபோதிலும் எம் நடைமுறை வாழ்க்கையில் இதனை செயற்படுத்தாவிட்டால் அது பயனற்றது.எனவே நல்லொழுக்க விழுமியம் எம் வாழ்வின் பழக்கவழக்கமாக மாறிவிடுகிறது அத்துடன் நல்லொழுக்க விழுமியமாகவும் மாறிவிடுகிறது.இரக்கம் சீரான பயிற்சியாக எம் வாழ்வில் நாம் கடைபிடிக்கும் போது எம்மை அறியாமலே பழக்கவழக்கமாக நல்லொழுக்க விழுமியமாக மாறிவிடுகிறது.

### இரக்கம் - வல்லமை:

கடவுளின் சர்வ வல்லமையுள்ளவர் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. அப்படியென்றால் ஏன் வல்லமையுள்ளவர் இரக்கம் காட்ட வேண்டும் என தோன்றக்கூடும் தண்டிக்கக்கூடிய வல்லமை பொருந்தியவர் இரக்கம் காட்டமுடியுமா? என்னும் வினா எழக்கூடும்.எனவேதான் திருத்தந்தை பிரான்சிஸ் புனித அக்குயினாஸின் வார்த்தைகளை அடித்தளமாகக் கொண்டு இரக்கத்தின் ஆண்டுக்கான சுற்றுமடலில் இறைவனின் இரக்கம் பலவறீனத்தின் அடையாளமென்பதை விட அவரின் சர்வவல்லமையின் அடையாளமாக கருதமுடியும்

என கூறியிருக்கிறார்.(Misericordiae valtus Bull n.06) இவ்வார்த்தைகளின் மூலம் இறைவனின் ஒப்பற்ற தனித்துவத்தை எடுத்தியம்புகின்றார்.அதனால்தான். எந்தவொரு மதத்திலும் இல்லாத ஓர் அருட்கொடை கிறிஸ்தவர்களுக்கு கிடைத்திருக்கிறது. என்னவெனில் ஒப்புரவு அருட்சாதனம் எனும் கொடை கடவுள் படைப்புகளை படைத்து ஆழ்வதோடு மட்டும் நின்றுவிடவில்லை மேலும் அவர் இரங்கி உருவாக்குவதிலும் மீட்டெடுப்பதிலும் வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.வல்லமைபொருந்திய இறைவனால் அனைத்தையும் செய்ய இயலும் ஏன் பாவிகளை தண்டிக்கக்கூட முடியும் ஆனால் இவையனைத்தையும் தவிர்த்து அவர் இரக்கம் காட்டுவதில் சர்வ வல்லமையுள்ளவரானார் இங்கு நாம் நோக்கவேண்டிய விடயம் என்னவெனில் இறைவனின் இரக்கம் எமக்கு கிடைத்த சலுகை அல்ல மாறாக எமக்கு கிடைத்த கொடை.இறைவனின பார்வையில் இரக்கம் விழுமியங்களுக்கெல்லாம் விழுமியமாக அவரின் செயல்களை எல்லாம் கடந்த ஓர் விழுமியமாக தென்படுகின்றது. ஆனால் எம்மிடையே இரக்கம் உதவி மற்றும் தருமம் எனும் கட்டுகோப்பில் அடங்கிவிடுகிறது.எனவே இரக்கம் என்றால் என்ன எனும் தெளிவு மிகவும் அவசியமானது.

அப்படியானால் இரக்கம் ஓர் சக்தி (வல்லமை) மிக்கதொன்றானால் கடவுளின் உருவில் படைக்கப்பட்ட எமக்கும் இரக்கம் காட்டுவதற்கான வல்லமையை இறைவன் பொழிந்திருக்கிறார்.நாம் எல்லோரும் பலசாலியாக வரவேண்டும் என விரும்புகிறோம்.ஏன் நாம் இரக்கம் காட்டுவதில் பலமிக்கவர்களாக வரக்கூடாது ஏனென்றால் உடலின் சக்தியைவிட மனதிக்குக் இருக்கவேண்டிய சக்திதான் மிக அவசியம் இரக்கமுடைய மனதுக்கும் ஓர் வல்லமை அவசியம் மற்றவர்மேல் இரக்கம் காட்டுவதற்கு மனம் இரங்குவதற்கும் ஓர் வல்லமை வேண்டும்.

இவ்வாறாக இறைவனின் இரக்கம் பலவறீனமான மனிதர்களுக்கும் துணைபுரிய இரங்கும் மனநிலையை குறித்து நிற்கிறது.அவரின் பெருந்தன்மைமிக்க மனநிலையை குறித்து நிற்கிறது.அவரின் பெருந்தன்மைமிக்க மனநிலை எவ்வேளையிலும் பாவம் நிறைந்த மனிதனுக்காக இரங்கி வந்தே ஒழிய ஒதுக்கி வைத்துவிடவில்லை.இதனை எமது ஆறறிவினால் அறிந்து கொள்வது மிகக் கடினம் அதனால தான் எம் வாழ்வில் நடைபெறும் சில கசப்பான அனுபவங்களை இறைவனின் இரக்கத்துடன் இணைந்து புரிந்துகொள்ளமுடியாமல் இருக்கிறது.புரிந்துகொள்ள வேண்டுமெனில் தளரா நம்பிக்கை அவசியம்அத்துடன் மனப்பக்குவமும் அவசியம் "இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் (மத்28:20) என்ற இயேசுவின் நம்பிக்கைதரும் வார்த்தைகளை உணர்ந்தவர்களாய் இறைவனின் முழுமையான தன்னலம் பாரா இரக்கத்தையும் அன்பையும் அனுபவிப்போம்.இவ் இரக்கத்தை நல்லொழுக்க விழுமியமாக எம் வாழ்வில் கடைபிடிப்போம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு

மறைக்கல்வி மாணவருக்கான போட்டி... FR NC..

**கவிதை வரிகளை**
**சரியாக வடிவமையுங்கள்**

## இதோ கவிதைவரிகள்

- ✠ வளமான எண்ணங்கள் ஒன்றாகியே
- ✠ இறைவழிகள் காட்டி விட்ட மறையறிவு
- ✠ மனங்களிலே இடம்பிடிக்க
- ✠ வாழ்வோடு இணைந்து அவை சுடர் வீசவே
- ✠ மறையறிவின் உயர்நிலைகள்
- ✠ இறைவழியில் வாழவே துணை செய்யுமே.

**இப்போது கவிதைவரிகளை**
**சரியாக வடிவமையுங்கள்**

சரியாக வடிவமைக்க
முதலாமிடம் - 500/=
இரண்டாமிடம் - 300/=
மூன்றாமிடம் - 200/=

எல்லோரும் சரியாக வடிவமைத்தால்.
குலுக்கல்மூலம் தெரிவு.
# முடிவுத்திகதி:10.10.2016

# அகத்தின் அழகு..

.....FR NC......

- ✠ மனமகிழ்வும் மனநிறையும்
- ✠ முகமதிலே தெரிந்திடவே
- ✠ இதயமது இன்பமதில்
- ✠ இணைந்திருக்க வேண்டுமே.
- ✠ முகமதனை முழுமையாய்
- ✠ அழித்து விடும் போது
- ✠ அகமதனின் இன்பநிலை
- ✠ வெளிக்காட்டி நிற்குமே.

- ❑ எட்டுவரிகள் கொண்ட கவிதைகள்
- ❑ இரண்டுவரிகள் மட்டும்
- ❑ மாறி உள்ளன.
- ❑ கண்டுபிடித்து சரியாக்குங்கள்.
- ❑ வேறொருதாளில் வடிவமையுங்கள்.

முதலாமிடம் - 500/=
இரண்டாமிடம் - 300/=
மூன்றாமிடம் - 200/=

எல்லோரும் சரியாக வடிவமைத்தால்.
குலுக்கல்மூலம் தெரிவு.
# முடிவுத்திகதி:10.10.2016

"விசுவாச வளர்ச்சியும் கிறீஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியையும் பேணி வளர்ப்பதே மறைக்கல்வியின் பணி"
(ஆயர்பேரவை 1978)


# மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு

**மறைக்கல்வி ரயில் தொடர் புதிர்**

*இங்குள்ள 24 சொற்களைக் கடிகாரச் சுற்றுப்படி கட்டத்திற்குள் நிரப்ப வேண்டும்.ஒரு சொல்லின் முடிவில் இன்னொரு சொல் தொடங்க வேண்டும்.உங்கள் உதவிக்கு "துறவி" என்ற சொல் கொடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| வித்து | விறகு | கிழவி | குச்சி |
| திரிகை | தும்பி | சிறுமி | கிருதா |
| கும்பா | தாம்பு | சுத்தி | மிளகு |
| **துறவி** | சித்தி | பாடகி | நஞ்சு |
| புரவி | விருது | திக்கு | கைராசி |
| குருவி | பிரபு | விவேகி | புத்தி. |

மறைக்கல்வி ரயில் தொடர் புதிர்




**வாக்கியம் அமைத்தல்**

1.............................................................
2.............................................................
3.............................................................
பெயர்:...........................
முகவரி:...........................
பங்கு:...........................

01. கட்டங்களைப் பூர்த்தி செய்த பின் ஏதேனும் மூன்றிற்கு விவிலியம் "மறைக்கல்வி சம்பந்தமாக வரும் சொல்லை எடுத்து ஒரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக. உதாரணம்:தூய ஆவியின் வரங்களில் ஒன்று புத்தி.
.02. எவரும் பங்குபற்றலாம்.
03. முடிவுத் திகதி - 1 0.10.2016.
04. 1ம் பரிசு500/=ரூபா
2ம்பரிசு 300/= ரூபா
3ம்பரிசு 200/=ரூபா

# மறைக்கல்வி கற்போம் - 19



**1).விசுவாசப் பிரமானத்தின் மூன்று பகுதிகள் எவை?**
1. தந்தையாகிய கடவுளைப் பற்றியும் அவரது படைப்பை பற்றியும் விசுவசிப்பதாகும்.
2. மகனாகிய இயேசு கிறிஸ்து நம்மை பாவத்திலிருந்து மீட்டு மனிதனாக பிறந்து பாடுகள்பட்டு உயிர்த்தெழுந்து தந்தையின் வலப்புறத்தில் வீற்றிருப்பதை அறிக்கையிடுகிறது.
3. தந்தை மகனின் அன்பினால் உருவான தூய ஆவியின் புனிதப்படுத்தலை அறிக்கையிடுகிறது.

**2) மூவேளை செபத்தின் பொருள் என்ன?**
கிறிஸ்து மனிதனானார் என்பதை நினைவூட்டுவது.

**3) இறைவாக்கினர்கள் என்பவர்கள் யார்?**
இறைவனின் வாக்கை உரைப்பவர்கள்
இறைவனின் வாயாக இருப்பவர்கள்
இறைவனின் திட்டத்தை மக்களுக்கு வெளிப்படுத்துபவர்கள்.

**4) நமக்கும் தூய ஆவிக்கும் உள்ள உறவு என்ன?**
தூய ஆவி நம்முள் குடிகொண்டு நம்மை புனிதப்படுத்தி தந்தையோடும் மகனோடும் இணைக்கிறார்.

**5) திருச்சபையில் தூய ஆவியின் பணி என்ன?**
தூய ஆவி திருச்சபையில் இருந்து அதனை வழிநடத்துகிறது.

**6) விவிலியம் எப்போது எழுதப்பட்டது?**
ஏறத்தாழ 1000 ஆண்டு அளவாக குறிப்பாக கி.மு 900முதல் கி.பி 150வரை

**7) விவிலியம் எங்கு எழுதப்பட்டது?**
பலஸ்தீனம் பாபிலோன் ' எகிப்து 'உரோமை 'மற்றும் கொரிந்து ஆகிய பல்வேறு இடங்களில்

**8)விவிலியம் எதற்காக எழுதப்பட்டது?**
இறைவனின் அன்பை உணர்ந்து கொள்ளவும் இறைவனுக்கும் மனிதனுக்கும் இருந்த உறவை அறிந்து கொள்ளவும் தம் மக்களுக்கு செய்த அருள் செயல்களை அறிந்து கொள்ளவும்

**9) திரு விவிலியம் எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?**
329 மொழிகளில்

**10) திருவிவிலியத்தின் தமிழ் பொது மொழி பெயர்ப்பு எப்போது வெளியிடப்பட்டது?**
1995ம் ஆண்டு மதுரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்.



"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணி முடியாகத் திகழ்வாய்." (எசாயா 62:03)

திரு. திருமதி. ஸ்பென்சர் ப்ரூனோ ஆன்ஸ்டெப்னி தம்பதிகளின் செல்வப் புதல்வி பற்றிமாரோ தனது முதலாவது பிறந்த நாளை 08.09.2016 அன்று பிரான்சில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசை யாகக் கொண்டாடுகிறார் .

இவரை அம்மா. அப்பா. அப்பப்பா. மம்மா. பப்பா. மாமா. மாமாமாமிமார். சித்திமார். மச்சான்மார் உற்றார் உறவினர் அனைவரும் கிறிஸ்து இயேசுவின் அரவணைப்பில் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர்.

# முதியோர் சங்க உறுப்பினர்களின் சுற்றுலா.



பாலையூற்று லூர்து அன்னை திருத்தல சுவக்கீன் அன்னமாள் முதியோர் சங்க தலவில தூய அன்னமாள் முதியோர் சங்க உறுப்பினர்கள் கடந்த 16 17ம் திகதிகளில் தலவில தூய அன்னமாள் திருத்தலத்திற்கு சுற்றுலா சென்றிருந்தனர். பங்குத் தந்தையின் ஆலோசனையுடன் பயணத்தைத் தொடங்கியதோடு பல ஆலயங்கள் தரிசித்தும் இறைவேண்டல் செய்தும் இரு நாட்களையும் செலவிட்டு மகிழ்வுடன் வீடுதிரும்பினர்.

**திரு.பாத்லட்**
**பாலையூற்று.**

# அன்புவழிபுரம் தூய சதாசகாய அன்னையின் வருடாந்த திருவிழா.

















பாலையூற்று பங்கின் துணைப்பங்காகிய அன்பு வழிபுரம் தூய சதா சகாய அன்னை ஆலயத்தின் 25வது வருடாந்த திருவிழா 19.08.2016 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 20.08.2016 அன்று எமது மறைமாவட்ட ஆயர் அதி வண.கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருவருட்சாதன சிறப்புத் திருப்பலியில் 14 பிள்ளைகள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தையும், 13 பிள்ளைகள் முதல் தேவநற்கருணை அருட்சாதனத்தையும் பெற்றுக்கொண்டார்கள். நவநாட்களில் குடும்ப வாழ்வினை மையப்படுத்திய மறையுரை சிந்தனை தலைப்புக்க ளும், சிறப்பு மறையுரைகளும் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. 26.08.2016 அன்று எமது பங்குத் தந்தை அருட்பணி மதுராங்கன் குருஸ் அவர்களின் 13வது குருத்துவ நாள் நினைவு வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

27.08.2016 அன்று மாலை பங்குத்தந்தை அருட்பணி மதுராங்கன் குருஸ் அவர்கள் தலைமையில் பொது நற்கருணை வழிபாடும், ஆராதனையும் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் இடம் பெற்றது. திருவிழா கூட்டுத் திருப்பலி அருட்பணி X. I. ரஜீவன் அவர்களது தலைமை யில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. ஆயிரத்திற்கும் மேலான இறைமக்கள் கலந்து கொண்டு இறையருளையும் அன்னையின் ஆசீரையும் பெற்றுச் சென்றனர். திருவிழாவின் சிறப்பு நிகழ்வாக, அன்று மாலை 3.00 மணிக்கு "வாருங்கள் கொண்டாடுவோம்" எனும் தலைப்பில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டது.

# 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி
# விஜயகுமார் மனோஜ்



பிறப்பு - 18.03.2000
இறப்பு - 08.09.2016.

"அவரது ஆன்மா ஆண்டவருக்கு ஏற்புடையதாய் இருந்தது ஆண்டவர் அவரை விரைவில் எடுத்துக் கொண்டார். (சா.ஞா.4:14)

எங்கள் அன்புச் செல்வமே-மனோஜ்
நீ எமைவிட்டுப் பிரிந்து இரண்டாண்டுகள் ஓடி விட்டன

உன் நினைவலைகள் மட்டும் – எம்
நெஞ்சிலிருந்து என்றுமே அழியாதடா
எம் குலவிளக்கே
நீ வந்து பதினைந்து வருடங்கள்
பூர்த்தியாகு முன்னரே
இவ்வுலகில் நின்று விடை பெற்றாயோ?

இவ்வுலகில் நீ வாழ்ந்த காலத்தில்
கல்வியில் சிறந்து விளங்கி
பதக்கங்கள் பல பெற்று வீட்டிற்கு
பெருமை சேர்க்கும் நேரமதை
பொறுக்க இயலாத கயவன் – உன்
ஆயுளுக்கு கொடிய நோயை தந்தானோ!

கண்மணியே நீ அனுபவித்த வேதனைகள்
எத்தனை–அதனை கூற என்னிடம்
வார்த்தைகள் இல்லை மகனே

உன் வேதனையை கண்ணுற்ற படைத்த
பரமன் யேசப்பா என நீ அழைத்த
குரல் கேட்டு உனை
தன்னோடு அழைத்துக் கொண்டானோ

நீயின்றி உன்தம்பி–தனிமையில்
தவிக்கிறான் எப்போதையா உன்
முகம் நாம் மறுபடி பார்ப்போம்.

**உன் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும் குடும்பத்தினர்.**

# 41ம் நாள் நினைவு
# அமரர் மாட்டின் அன்ரனி



அன்பிற்கு அகராதியாய் – எமக்கு
ஆதரவாய் இருந்தீர்கள் இன்று
எம்மை அநாதையாய் விட்டு
நீங்கள் மட்டும் எங்குதான் சென்றீரோ.

காலம் செய்த கோலத்தால்
காலனும் உம்மை அழைத்து சென்று விட்டான்
நாங்கள் மட்டும் உங்கள் பிரிவால்
கண்களில் கண்ணீருடன் கலங்கி நிற்கின்றோம்.

இன்பமாக இருந்த எம் வாழ்வும்
இன்று இருளாய் ஆனது
உங்கள் அன்பால் எம்மை அரவணைத்து
இன்று நீங்கள் மட்டும் தனியாக சென்றீர்கள்

இனி உங்களை எப்போது காண்போமோ?
ஆனால் உங்களின் நினைவுகளுடன் எங்கள்
காலம் கழியும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம்
இறைவனை மன்றாடுகின்றோம்.

**பிரிவால் கலங்கி தவிக்கும் மனைவி மகன் குடும்பத்தினர்.**

பிறப்பு-1974-09-11 இறப்பு-2016-07-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைவா என்றும் உள்ள வழியில் என்னை நடத்துவீர்.(தி:பா 139:24)"